# உதயன்

சுடர் : 36 கதிர் : 279 | வெள்ளிக்கிழமை | ஆவணி 18 ஆம் நாள் 03 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## சீனி விலை 122 ரூபா

நிர்ணயித்தது அரசு

கொழும்பு, செப். 3

சீனிக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலை விபரம் நேற்று வெளியானது. 15

# கொரோனாச் சாவுகளை கட்டுப்படுத்த முடியாது

### கைவிரித்தார் இராணுவத் தளபதி

கொழும்பு, செப்ரெம்பர். 3

கொரோனாச் சாவு எண்ணிக்கையை தம்மால் கட்டுப்படுத்த முடியாது என்று கொரோனாத் தடுப்புக்கான இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தொற்றாளர்களின் எண்ணிக்கையை மறைக்கும் நோக்கம் தமக்குக் கிடையாது எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களைக் கொரோனா தாக்கினால் அவர்கள் தொற்றிலிருந்து தப்புவது கடினம். நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களுமே கொரோனாவால் அதிகம் உயிரிழக்கின்றனர். எனினும், அனைவரும் தடுப்பூசிக 15

## மின்னல் தாக்கி இ.போ.ச. சாரதி சாவு!



யாழ்ப்பாணம், செப். 3

இடி மின்னல் தாக்கி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தப் பரிதாப சம்பவம் அச்சுவேலி 15

## வடக்குக்கு வந்தது 1 89,500 கிலோ சீனி

தட்டுப்பாடு விரைவில் நீங்கும்

யாழ்ப்பாணம், செப். 3

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சீனித் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் வகையில், ஒரு லட்சத்து 86 ஆயிரத்து 500 கிலோகிராம் சீனி எடுத்துவரப்பட்டுள்ளதென மாகாண கூட்டுறவு ஆணையாளர் தெரிவித்தார். 15

## கொரோனாவால் யாழில் 6 பேர் சாவு

யாழ்ப்பாணம், செப். 3

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 6 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். அவர்களில் ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளம் ஊடகவியலாளர் ஞானப்பிரகா 15

## 2 முகக்கவசங்களை இனி அணியுங்கள்!

இராஜாங்க அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, செப். 3

நாட்டில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகின்றமையால் கட்டாயம் இரண்டு முகக்கவசங்களை அணியுமாறு நாட்டு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன் என்று இராஜாங்க அமைச்சர் சுதர் 10

## வவுனியாவில் நேற்று முன்தினம் 239 பேருக்குக் கொரோனா

வவுனியா,செப்.3

வவுனியாவில் நேற்றுமுன்தினம் மட்டும் 239 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதாரப்பிரிவினர் தெரிவித்துள்ளனர். 10

## வவுனியாவில் நால்வர் சாவு

வவுனியா, செப்.3

கொரோனாத் தொற்றால் வவுனியாவில் நேற்று நான்கு பேர் உயிரிழந்தனர்.

அவர்களில் இருவர் சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். 15

## வடக்கில் 161 பேருக்கு கொரோனா

### பி.சி.ஆர். சோதனையில் 52 தொற்றாளர்

யாழ்ப்பாணம், செப். 3

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 52 பேருக்குத் 15

### தென்மராட்சியில் 109

முதியோர் இல்லத்தில் மட்டும் 72 தொற்றாளர்

சாவகச்சேரி செப் 3

தென்மராட்சி பிரதேசத்தில் மேலும் 109 பேர் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளமை நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் 15

## 204 பேர் சாவு!

கொழும்பு, செப். 3

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 204 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் 15

## 3,619 பேருக்கு நேற்று தொற்று

கொழும்பு, செப். 3

இலங்கையில் கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 3 ஆயிரத்து 619 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரி 15

## புலிகள் மீதான தடை நீடிப்பு

பிரிட்டன், செப். 3

பிரிட்டனில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மீதான தடையை தொடர்ந்தும் நீடிப்பதற்கு பிரிட்டன் தீர்மானித்துள்ளது.

அந்தநாட்டு உள்துறை அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும் என்று புலம்பெயர் தமிழர்கள் நீண்ட காலமாக வலியுறுத்திவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அங்கஜனின் கனவுக்கு ஆப்பு? எதிராக களமிறங்கும் அரசு!

பிரதமரின் ஒருங்கிணைப்பாளரின் அறிக்கையால் பரபரப்பு

யாழ்ப்பாணம், செப். 04

பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் திட்டங்களை தன்னுடைய சொந்தத் திட்டங்கள் என்று மக்களை திசை திருப்பும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனுக்கு எதிராக காட்டமான அறிக்கை ஒன்றை வடக்கு, கிழக்கு மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான இணைப்பாளரும், பிரதமரின் ஒருங்கிணைப்பாளருமான கீதநாத் காசிலிங்கம் நேற்று வெளியிட்டுள்ளார். இந்த விவகாரம் அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவெறியைத் தூண்டுகிறதாம் உதயன் பத்திரிகையின் செய்தி

## இ.போ.ச. வடக்கு முகாமையாளர் குற்றம் சுமத்துகிறார்

யாழ்ப்பாணம், செப். 3

ஜனாதிபதியின் பதவியேற்புநாளை முன்னிட்டு அருகிலுள்ள விகாரைகளுக்கு புத்தர் சிலை வழங்கும் நிகழ்வானது இன நல்லுறவை வளர்க்கும் விடயம் எனவும், உதயன் பத்திரிகை அந்த விடயத்தை இனவெறியைத் தூண்டும் வகையில் பிரசுரித்துள்ளதாகவும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.குலபாலசெல்வம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் முதலாம் திகதி உதயன் பத்திரிகையின் முதல் பக்கத்தில், 'கோத்தாவின் பதவியேற்பு நினைவாக விகாரைகளுக்கு புத்தர் சிலை வழங்குக - வடக்கு மாகாணத்தில் இப்படியொரு உத்தரவு' என்ற தலைப்பில் செய்தி வெளியாகியிருந்தது.

இந்தச் செய்தி தொடர்பில் ஆங்கில மொழியில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள விளக்க அறிக்கையில், வட பிராந்திய முகாமையாளர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி கோத்தாபயவின் பதவியேற்பு நாளை முன்னிட்டு விகாரைகளுக்கு புத்தர் சிலை வழங்கும் விடயம் வடக்கு மாகாணத்துக்கு மாத்திரம் உரியதன்று. இது நாடு முழுவதும், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக முன்னெடுக்கப்படுகின்றது. பொது ஜன பெரமுன தொழிற்சங்க உறுப்பினர்களிடம் அந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. இந்தக் கோரிக்கையை வடக்கிலுள்ளவர்களுக்கு நான் தெரியப்படுத்தினேன். இன நல்லுறவை வளர்க்கும் நல்ல நோக்கத்துடன் இந்தத் திட்டம் முன்மொழியப்பட்டது. ஆனால் உதயன் வெளியிட்ட செய்தியில், வடக்கு மாகாணம் வேறு ஒரு நாடு போன்று சித்திரிக்கப்பட்டுள்ளது. 'இவ்வாறு வடக்கில் ஒரு உத்தரவு' என்று குறிப்பிட்டதன் ஊடாக இன வெறியைத் தூண்டியுள்ளீர்கள். இது தொடர்பில் நான் மிகவும் வருந்துகின்றேன்.

மேலும், இவ்வாறான விடயங்கள் எமக்குப் புதிதல்ல. நாங்கள் பௌத்த பக்த நண்பர்களுடன் இணைந்து கதிர்காமத்துக்கு ஆண்டுதோறும் டிசெம்பர் 31ஆம் திகதி சென்று கிரி விகாரையில் இடம்பெறும் ஒளி பூஜையில் பங்கேற்று வருகின்றோம், என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் குறிப்பு:

1 - புத்தர் சிலை வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கியதை மறுக்காமல் ஏற்றுக் கொண்டு அதற்கு ஒப்புதலளித்து விளக்கமளித்த பிராந்திய முகாமையாளருக்கு முதலில் நன்றி.

2 - வடக்கை ஒரு போதும் தனி நாடாக உதயன் எண்ணவில்லை. ஆனால் இலங்கையின் ஏனைய பகுதிகளை விடவும் வடக்கு = கிழக்கு பகுதிகள் தனித்துவமானவை என்பதை பொதுமுகாமையாளர் கூட மறுக்கமாட்டார். வடக்கு மாகாணத்திலுள்ள விகாரைகளுக்கு புத்தர் சிலை வழங்குவதை 'இனநல்லுறவு' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். வடக்கு = கிழக்கு மாகாண மக்கள் இங்கு முளைக்கும் பௌத்த விகாரைகளையும், புத்தர் சிலைகளையும் ஆக்கிரமிப்பின் சின்னமாகவே பார்க்கின்றனர். அது மக்களின் தவறல்ல. ஆட்சியாளர்கள் தான் விகாரைகளையும் , புத்தர் சிலைகளையும் ஆக்கிரமிப்பின் சின்னமாக, சிறுபான்மையினத்தின் நிலத் தொடர்ச்சியை குலைக்கும் ஒன்றாக, இனப்பரம்பலை மாற்றியமைக்கும் கருவியாக பயன்படுத்தி வருகின்றனர்.

தமிழர்களின் பாரம்பரிய தேசங்களில் விகாரைகள் அமைத்தல், புத்தர் சிலைகள் வைத்தல் என்பன திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குருந்தூர்மலை இதற்கு ஆகப் பிந்திய உதாரணம். இதனைக் கூட அறியாதவராக, வடக்குப் பிராந்தியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு தமிழ் பொதுமுகாமையாளர், இருப்பது ஆச்சரியமாக உள்ளது. இனநல்லுறவுக்கு புத்தர் சிலைகளை வடக்கில் வழங்குவதாகச் சொன்னால் அதை புத்தர் கூட நம்பமாட்டார்.

3- ஒரு புறம் கொரோனா, மறு புறம் அத்தியாவசியப் பொருள்களின்மை, இன்னொரு பக்கம் வாழ்வாதார இழப்பு என நாட்டு மக்கள் துன்பத்தின் பிடியில் நசுக்கப்படுகின்றனர். அவர்களின் துயர் துடைக்க எவ்வித அக்கறையும் காட்டாத இது போன்ற அரச சார்பு தொழிற்சங்கங்கள் , மக்களை இவ்வாறான நிலைமைக்கு கொண்டு சென்று தள்ளிய ஆட்சியாளர்களின் பதவியேற்பு நாளில் விகாரைகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா செலவில்புத்தர் சிலைகளை வழங்குவது காலப்பொருத்தமான செயலா என்பதை அவர்கள் தம் மனச்சாட்சியையே கேட்கட்டும். அதற்குப் பதிலாக அந்தப் பணத்தில் துன்பத்தில் உழலும் ஒரு சில குடும்பங்களின் துயர் துடைக்கலாமே. (ஆ=ர்)

கொரோனாவிலிருந்து தப்புவதற்கு

# அடுத்துவரும் ஓரிரு நாள்களில் 2ஆவது ஊசியைப் போடுங்கள்

## யாழ்.மாவட்டச் செயலர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 3

பொதுமக்கள் அனைவரும் தாமதிக்காது ஓரிரு நாள்களுக்குள் இரண்டாம் கட்ட தடுப்பூசிகளைப்பெற்று, கொரோனாத் தொற்றுத் தாக்கத்திலிருந்து பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் அறிவுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் விரைவாகவும் அமைதியான முறையிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய இறப்பு நிலைமையை ஆய்வுக்கு உட்படுத்தியபோது 60 வயதிற்கு மேற்பட்டோரின் இறப்புஎண்ணிக்கையில் ஆண்களைவிட, பெண்களின் இறப்பு வீதம் அதிகமாகவும் காணப்படுகின்றது. இது வரையான அறிக்கைகளின்படி 70 வயதுக்கு மேற்பட்டோரில் ஆண்கள் 79 பேரும் பெண்கள் 53 பேரும் உயிரிழந்துள்ளனர்.

எனவே அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்படக்கூடிய சூழ்நிலை அதிகமாகக் காணப்படுவதால் எவ்வித தயக்கமுமின்றி தடுப்பூசி பெற்றுக்கொள்ளுங்கள் என்று அரசும் சுகாதாரத் தரப்பினரும் அறிவுறுத்துகின்றனர். சில நாள்களுக்குள்ளேயே தடுப்பூசியைப்பெற்று கொரோனாத் தொற்றிலிருந்து உங்களையும் உங்கள் சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்ளுங்கள். - என்றார். (த26)

# 15 பவுண் நகைகள் நூதனமாகத் திருட்டு

மன்னார், செப். 3

வயோதிபத் தம்பதி தங்கியிருந்த வீட்டில், 15 பவுண் நகைகள் நூதனமாகத் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் மன்னார் கருங்கண்டல் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த தம்பதி திருமண நிகழ்வுக்குச் சென்ற நேரத்தில், வீட்டின் கதவைத் திறப்பால் திறந்த திருடர்கள், நகைகளைத் திருடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அடம்பன் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது.

அடம்பன் பொலிஸார் மற்றும் தடயவியல் அதிகாரிகள் குறித்த வீட்டைச் சோதனை செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4,213)

# கடற்கரையில் புதைந்திருந்த வெடிபொருள்கள் சில மீட்பு



முல்லைத்தீவு,செப்.3

முல்லைத்தீவு புதுமாத்தளன் கடற்கரையில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி வெடிபொருள்கள் நேற்று மீட்கப்பட்டன.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து, நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக, முல்லைத்தீவு பொலிஸார் வெடிபொருள்களை மீட்டனர்.

இவை போர் நடைபெற்ற காலப்பகுதியில் விடுதலைப்புலிகளால் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (4,19)



# இளம் ஊடகவியலாளர் கொரோனாவுக்குப் பலி

யாழ்ப்பாணம், செப். 3

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்த விசேட தேவைக்கு உட்பட்ட சுயாதீன ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஸ், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

மூச்சுத் திணறல் ஏற்பட்டு அவதியுற்ற நிலையில், சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது அவர் உயிரிழந்துவிட்டார் என்பது உறுதிசெய்யப்பட்டது.

கடந்த ஐந்து நாள்களாக தலைவலி, இருமல் மற்றும் இலேசான காய்ச்சலுடன் காணப்பட்ட அவர், நேற்றுமுன்தினம் புதன்கிழமை அன்டிஜென் பரிசோதனையை தானாக முன்சென்று மேற்கொண்டிருந்தார். அதன் போதே அவருக்கு, தொற்று உறுதியானது. எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்துள்ளார்.

கொடிகாமத்தை சேர்ந்த அவர், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கு சுயாதீன ஊடகவியலாளராக கட்டுரைகள், செய்திகள் எழுதி வந்துள்ளார்.

குறிப்பாக உதயனின் இணையத்தளத்துக்கு செய்திகளை பதிவேற்றும் கடமையை மேற்கொண்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாருக்கு உதயன் தன் அஞ்சலியைத் தெரிவிக்கின்றான். (த9,26,159)

# இரண்டாவது தடுப்பூசி கிடைப்பதில் தாமதம்

கிளிநொச்சி,செப்.3

கிளிநொச்சி மாவட்டத்துக்கு கொரோனாத் தடுப்பூசியின், இரண்டாவது தடுப்பூசி இன்னும் கிடைக்கவில்லை என்று கிளிநொச்சி பிராந்திய தொற்றுநோயியலாளர் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.

விரைவில் தடுப்பூசி கிடைக்கப்பெறும் என்று நம்புகின்றோம். அதேவேளை, இரண்டாவது தடுப்பூசி, முதலாவது தடுப்பூசி செலுத்தப்பட்ட குறிப்பிட்ட நிலையங்களில் மாத்திரம் செலுத்தப்படமாட்டாது.

பொதுமக்கள் அதிகமாக ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் வகையில் பிரதேச ரீதியாக தடுப்பூசி செலுத்தப்படும் நிலையங்கள் உருவாக்கப்பட்டு இரண்டாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தடுப்பூசி கிடைத்ததும் விவரங்கள் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4,214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரடங்கு தொடருமா? இன்று முடிவு தெரியும்



கொழும்பு, செப். 3

**தற்போது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை நீடிப்பதா? இல்லையா என்பது தொடர்பாக இன்று முடிவு எடுக்கப்படவுள்ளது.**

ஜனாதிபதி தலைமையில் இன்று கூடவுள்ள கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

நாட்டில் கொரோனாத் தொற்றுத் தீவிரமடைந்ததை அடுத்து, கடந்த 20ஆம் திகதி நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு நடைமுறைக்கு வந்தது. தற்போது நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை 4 மணியுடன் முடிவுக்கு வருகின்றது.

இதேவேளை, நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு பின்னர் மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்குமாறு மருத்துவர்கள் உட்பட சுகாதாரத் தரப்பினரும், அரசியல் கட்சிகளின் பிரமுகர்களும் அரசிடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ள னர்.

தொற்றாளர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தி, வைரஸ் பரவலைத் தடுக்க வேண்டுமெனில் குறைந்தபட்சம் மேலும் இரு வாரத்துக்காவது விஞ்ஞான பூர்வமான முறையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறையில் இருக்க வேண்டும் எனவும் மேற்படி தரப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

அத்துடன், செப்ரெம்பர் 18 ஆம் திகதி வரை ஊரடங்கை நீடித்தால் 7 ஆயிரத்து 500 கொரோனா உயிரிழப்புக்களைத் தடுக்கலாம் என உலக சுகாதார நிறுவனத்தின் பங்களிப்புடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ.44)




## வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளர் தெரிவு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப்.3

வல்வெட்டித்துறை நகரசபைக்கான தவிசாளர் தெரிவு நேற்று நடைபெறவிருந்த நிலையில், சபையில் உரிய கோரம் இல்லாததால் தலைவர் தெரிவு திகதி குறிப்பிடப்படாது ஒத்திவைக்கப்பட்டது. நகரசபைத் தவிசாளரைத் தெரிவு செய்வதற்காக நேற்று முற்பகல் 10 மணிக்கு நகரசபை மண்டபத்தில், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் சபை கூடியது.

சுயேட்சைக் குழு உறுப்பினர்கள் மூவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் இருவருமே ச்பைக்கு வந்திருந்தனர். அதையடுத்து சபை 30 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் சபை கூடியபோதும், உரிய கோரம் இல்லாத காரணத்தால் தவிசாளர் தெரிவு திகதி குறிப்பிடப்படாது ஒத்திவைக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை நகரசபைத் தவிசாளராகப் பதவி வகித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் கோணலிங்கம் கருணானந்தராசா அண்மையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தார்.

வல்வெட்டித்துறை நகரசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 7 உறுப்பினர்களையும் சுயேட்சைக் குழு 4 உறுப்பினர்களையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி என்பன தலா 2 உறுப்பினர்களையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன தலா ஒரு உறுப்பினரையும் கொண்டுள்ளன. (எ-26)



## பெயரளவிலான முடக்கம் பயன்தரப்போவதில்லை

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் கடும் விசனம்

கொழும்பு, செப்.3

பொதுமக்கள் பொறுப்பற்ற முறையில் தொடர்ந்து செயற்படுவார்களேயானால், தனிமைப்படுத்தல் ஊரடங்கு பயனளிக்காது என்று இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறையில் உள்ளபோதும், பல்வேறு காரணங்களைக் காட்டி பெரும்பாலான மக்கள் சுதந்திரமாகச் சுற்றித் திரிகின்றனர் என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

கடந்த சில நாள்களாக பொதுமக்கள் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கின்றனர். தற்போதைய போக்குத் தொடருமானால் முழு நாடும் பாதிக்கப்படும். ஊரடங்கு உத்தரவைச் சரியான முறையில் பின்பற்றாது கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது. அதன் தொடர்ச்சியாக பொருளாதார ரீதியாகவும், சுகாதார ரீதியாகவும் இலங்கை கடும் பாதிப்புகளை எதிர்கொள்ளும். கொரோனாத் தொற்றை முடிவுக்குக் கொண்டுவர, அனைவரும் கவனத்துடன் செயற்பட வேண்டும். விதிகளைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்தாவிட்டால் முடக்கத்தைத் தொடர்வது பயனற்றது. தினசரி கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை தற்போது குறையவில்லை. ஆனால் அடுத்துவரும் சில நாள்களில் தொற்று வீதம் குறையும். என்றார். (எ-இ)

## அரிசி, சீனி விலைகளை கட்டுப்படுத்தத் திட்டம்!

கொழும்பு, செப்.3

அரிசி மற்றும் சீனியின் விலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று முதல் இந்த நடவடிக்கை ஆரம்பமாகும் என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார். (எ-இ)



## நாட்டுக்குள் புதிய பிறழ்வு நுழையுமானால் பேரழிவு!

### சுகாதார, மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, செப்.3

டெல்டா திரிபின் தாக்கத்தால் கடந்த மாதம் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 50 வீதத்தால் அதிகரித்துள்ளது. தென்னாபிரிக்க வைரஸ் பிறழ்வு இலங்கையில் பரவினால் இந்த எண்ணிக்கை 3 மடங்காகும் என்று சுகாதார, மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளரும், மருத்துவ நிபுணருமான சந்திம ஜீவந்தர தெரிவித்ததாவது

சி1.2 என்ற தென்னாபிரிக்க வைரஸ் மற்றும் "மூ" கொலம்பிய வைரஸ் ஆகியவை தற்போது பாவனையில் உள்ள தடுப்பூசிகளுக்குக் கட்டுப்படாதவை எனக் கூறப்படுகின்றது. இலங்கையில் இந்த வைரஸ்களில் ஒன்றேனும் பரவினால் தற்போது பதிவாகும் கொரோனா மரணங்களை விட மூன்று மடங்கு மரணங்கள் நாட்டில் ஏற்படும் அபாயநிலை உள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்- என்றார்.

இது தொடர்பில் சமூக மருத்துவத் துறை நிபுணர் பேராசிரியர் சுனெத் அகம்பொடி தெரிவித்துள்ளதாவது

நாம் புதிய வைரஸ் தொற்றுக்குள் சிக்கிக்கொண்டால், புதிய வைரஸ் பரவலுக்கு இடமளித்தால் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை இந்த ஆண்டுக்குள் 30 ஆயிரத்தை அண்மிக்கலாம். இந்த அச்சுறுத்தல் நிலைமையை கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டும். என்றார். இலங்கை மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன இது தொடர்பில் தெரிவித்ததாவது

கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி நாட்டின் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 508 ஆகக் காணப்பட்டது. செப்ரெம்பர் முதலாம் திகதி இந்த எண்ணிக்கை 9 ஆயிரத்தைக் கடந்துள்ளது. இந்த நிலைமை தொடர்ந்தால் அடுத்த மாதத்தில் மரண எண்ணிக்கை நூறுக்கு முன்னூறு என்ற ரீதியில் அதிகரிக்கும். இது நாட்டின் சுகாதார கட்டமைப்பை மட்டுமல்லாது பொருளாதாரத்தையும் வெகுவாக பாதிக்கும். என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைப்பற்றப்பட்ட 30ஆயிரம் மெட்ரிக் தொன் சீனி அரச, தனியார் நிறுவனங்கள் ஊடாக விநியோகம்



**கொழும்பு, செப். 3**

**களஞ்சியசாலைக்குள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பு நடவடிக்கைகளின்போது கண்டு பிடிக்கப்பட்ட 29 ஆயிரத்து 900 மெட்ரிக் தொன் சீனி, அரசுடமையாக்கப்பட்டதாக, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் என்.டீ.எஸ். பி.நிவுன்ஹெல்ல தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தச் சீனித் தொகையை, கட்டுப்பாட்டு விலையில், அரச மற்றும் தனியார் வர்த்தக நிலையங்களின் ஊடாக பொதுமக்களுக்கு விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கிராம் சீனிக்காக அறவிடப்பட்ட 50 ரூபா என்ற இறக்குமதித் தீர்வை வரியானது, நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில், 2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் 14ஆம் திகதி முதல், 25 சதமாகக் குறைக்கப்பட்டது. அன்றைய நாளில், நாட்டுக்குள் 88 ஆயிரத்து 878 மெட்ரிக் தொன் சீனி காணப்பட்டது.

2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் 14ஆம் திகதி முதல் 2021ஆம் ஆண்டு ஜுன் 30ஆம் திகதி வரை, 5 லட்சத்து 84 ஆயிரம் மெட்ரிக் தொன் சீனி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என, நுகர்வோர் விவகார அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது. உள்நாட்டின் மாதாந்தச் சீனித் தேவையின் அளவு 35ஆயிரம் மெட்ரிக் தொன்.

இருப்பினும், வருடாந்தச் சீனித் தேவைக்கு மேலதிகமாகச் சீனி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்று, நுகர்வோர் விவகார அதிகார சபையின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. நாட்டுக்குள் சீனிக்குத் தட்டுப்பாடு நிலவுவதான மாயையை உருவாக்கி, நுகர்வோரைச் சிரமத்துக்கு உட்படுத்தி, அதிக விலைக்கு சீனியை விநியோகிக்கும் முயற்சியொன்று, கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டமையைக் காணக் கிடைத்தது.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அத்தியாவசிய உணவு விநியோகத்துடன் சம்பந்தப்பட்ட அவசரகால விதிமுறைகள், கடந்த 30ஆம் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் பிரகடனப்படுத்தப்பட்டது.

இதன் பிரகாரம், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஒருவரை நியமித்து, சாதாரண பொது மக்களின் வாழ்க்கை நிலையை இயல்பு நிலையில் பேணுவதற்குத் தேவையான நெல், அரிசி, சீனி உள்ளிட்ட ஏனைய நுகர்வுப் பொருள்களை விநியோகிப்பதை ஒருங்கிணைப்புச் செய்வதற்கான அதிகாரங்களை அவருக்கு வழங்கவும், ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்நிலையில், பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் சீனியைக் கண்டுபிடிப்பதற்காக முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது கண்டறியப்படும் சீனித் தொகையைக் கட்டுப்பாட்டு விலையில் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளாதாக, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்ததாக, அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ -இ)

# அரச ஊழியர்களின் சம்பளத்தை குறைத்தாகவேண்டிய நிலைமை

## எதிர்க்கட்சி கூறுகின்றது

கொழும்பு, செப். 3

தற்போதைய சூழலில் அரச ஊழியர்களின் சம்பளத்தைக் குறைத்தாக வேண்டிய கட்டாயத்தில் அரசு உள்ளது. இந்த நிலைமை ஏற்படுவதற்கு ஆட்சியில் உள்ளவர்கள்தான் காரணம். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அவசர சட்டங்களின் மூலம் அரசின் செலவைக் குறைப்பதும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விநியோகத்தைக் குறைப்பதும் நெருக்கடி நிலையைச் சமாளிக்க உதவாது.

அரசின் செலவுகளைக் குறைப்பதற்கான திட்டத்தை நிதி அமைச்சர் சமர்ப்பித்துள்ள நிலையில், அது வெற்றியளிக்காது.

மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளின் கீழ் வரும் அரச ஊழியர்களின் சம்பளங்களைக் குறைக்க நிதி அமைச்சர் முயற்சிக்கின்றாரா? எனினும், அரச ஊழியர்களின் சம்பளத்தைக் குறைக்க வேண்டிய கட்டாயத்துக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. இந்த நிலைமைக்கு ஆட்சியிலுள்ள அரசே முழுப் பொறுப்பு - என்றார். (ஒ - 22)



# இலங்கைக்குத் தாய்லாந்தால் உயிர்க்காப்பு உபகரணங்கள்

கொழும்பு, செப். 3

இலங்கைக்குத் தாய்லாந்தால் ஒருதொகுதி மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வைத்து மேற்படி உதவிப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. 30 ஒட்சிசன் செறிவூட்டிகள், 2 வென்டிலேட்டர்கள், 108 ஒட்சிசன் தாங்கிகள், 62 ரெகுலேட்டர்கள் உள்ளிட்ட பல உபகரணங்கள் இந்த நன்கொடையில் அடங்கும். (ம)

# வத்திக்கான் தூதுவர் - பீரிஸ் மரியாதை நிமித்தம் சந்திப்பு!




கொழும்பு, செப். 3

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கத்தோலிக்க திருச்சபையின் வத்திக்கான் தூதுவர் பேராயர் பிரைன் உடைக்வே இடையிலான சந்திப்பொன்று அண்மையில் இடம் பெற்றுள்ளது. மரியாதை நிமித்தம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

கடந்த 31ஆம் திகதி இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. ஈஸ்டர் தாக்குதல் பேரிடர் ஒரு கொடூரமான சோகம். இந்தத் தாக்குதலால் கத்தோலிக்க திருச்சபை அனுபவித்த வலியைப் புரிந்து கொள்கின்ற அதேநேரம், பொறுப்புள்ள அனைவரையும் சட்டத்தின் முன்னால் கொண்டு வர வேண்டிய நீதியின் தேவைப்பாட்டை அமைச்சர் வத்திக்கான் பேராயரிடம் வலியுறுத்தினார்.

சிறுபான்மையினராக இருந்தபோதிலும், இலங்கையில் கத்தோலிக்கர்கள் உரிய மதிப்புடன் நடத்தப்படுகின்றமைக்கு உள்ளார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்த பேராயர், வேறு சில நாடுகளில் இவ்வாறான அங்கீகாரத்தைத் தான் அவதானிக்கவில்லை என அமைச்சரிடம் சுட்டிக்காட்டினார் - என்றுள்ளது. (ம)



# ரூ.620மில். பெறுமதியான மருத்துவ உபகரணங்கள்

அமெரிக்காவைச் சேர்ந்த சர்வதேச மருத்துவ சுகாதாரக் கழகம் 620 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இலங்கையில் தற்போது கொரோனா நாளுக்குநாள் தீவிரம் பெற்றுவரும் நிலையில், இந்தப் பேரிடரில் இருந்து இலங்கையை மீட்கும் வகையில் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 12 கொள்கலன்களில் இந்தப் பொருள்கள் எடுத்து வரப்பட்டு நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டன. ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுள்ள மருத்துவமனைகளுக்கு இந்த உதவிப்பொருள்கள் பகிரப்படவுள்ளன. (ம-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருள்கள் விலையேற்றம் பேக்கரி தொழில் முடக்கம்

மன்னார், செப்.3

அத்தியாவசியப் பொருள்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், பேக்கரித் தொழிலைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மா மற்றும் சீனி ஆகியவற்றின் விலை அதிகரித்துள்ளது.

4 ஆயிரத்து 850 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு மூடை மா தற்போது 5 ஆயிரத்து 460 ரூபாவுக்கும், இரண்டு மாதங்களுக்கு முன்னர் 5 ஆயிரத்து 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு மூடை சீனி தற்போது 9 ஆயிரத்து 800 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன் பேக்கரி உற்பத்திக்குத் தேவையான அனைத்துப் பொருள்களது விலையும் அதிகரித்துள்ளது. பாணுக்கு பத்து ரூபாவும், பனிஸ் வகைகளுக்கு ஐந்து ரூபா வீதமும் விலை அதிகரிப்பை மேற்கொண்டால், எமது தொழிலை ஓரளவுக்கேனும் முன்னெடுத்துச்செல்ல முடியும்.

இல்லாவிடில் பேக்கரி உற்பத்திப் பொருள்களுக்கான மூலப் பொருள்களின் விலையைக் குறைக்க வேண்டும். -என்றனர். (4-213)

## தென்னாபிரிக்க வைரஸ் இலங்கைக்கும் வரக்கூடும்

கொழும்பு, செப்.3

தென்னாபிரிக்காவில் இனங்காணப்பட்டுள்ள கொரோனா வைரஸின் புதிய பிறழ்வு, இலங்கையில் பரவியுள்ளதா என்பது உறுதி செய்யப்படவில்லை. தற்போது மக்கள் உலகளாவிய ரீதியில் பயணங்களை மேற்கொள்ளும் நிலையில், எந்தச் சந்தர்ப்பத்திலும் புதிய பிறழ்வு நாட்டுக்குள் நுழையலாம். இவ்வாறு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நாட்டுக்குள் புதிய வைரஸ் பிறழ்வுகள் நுழைவதற்கான சாத்தியங்கள் உள்ளன. அதற்கும் தயாராகிக் கொண்டே எமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். டெல்டா தொற்று இனங்காணப்பட முன்னர் நாம் தயாராகியதைப் போன்றே, புதிய பிறழ்வு தொடர்பான தயார்ப்படுத்தல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

எந்த வைரஸ் பிறழ்வு இனங்காணப்பட்டாலும், தனி நபர் இடைவெளி பேணுதல் போன்ற அடிப்படை சுகாதார நடைமுறைகளைச் சரியான முறையில் பின்பற்றுவது அத்தியாவசியமானதாகும். -என்றார். (எ-இ)

*சீனி நெருக்கடிக்குத் தீர்வாக*

# கரும்பு உற்பத்திக் கிராமங்கள் இந்த ஆண்டில் அமைக்கப்படும்

**கொழும்பு, செப். 3**

**சீனி நெருக்கடிக்குத் தீர்வாக இந்த ஆண்டில் கரும்பு உற்பத்திக் கிராமங்கள் பல அமைக்கப்படும் என கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்புர தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனி நெருக்கடிக்குத் தீர்வாக கரும்பு உற்பத்தி செய்யும் கிராமங்களை அமைக்கவும் கரும்புப் பாணி உற்பத்திக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கையில் கரும்பு பயிரிடக்கூடிய பகுதிகளை ஆராயுமாறு கரும்பு ஆராய்ச்சி நிறுவனத் தலைவருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## கொரோனாத் தொற்றுக்குள்ளான பெண் மூன்று குழந்தைகளைப் பிரசவித்தார்

கொழும்பு, செப். 3

கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய நிலையில் சுமார் 14 நாள்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த கர்ப்பிணிப் பெண்ணொருவர் 3 குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.

அறுவைச் சிகிச்சை மூலமாகக் குறித்த மூன்று குழந்தைகளும் பிறந்துள்ளன என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மூன்று குழந்தைகளில் இரு பெண் குழந்தைகள், ஒரு ஆண் குழந்தை. குழந்தைகள் அனைவரும் நல்ல உடலாரோக்கியத்துடன் உள்ளனர் என்றும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ம)

## மீள்குடியேறிய பகுதியில் வெடிபொருள்கள் மீட்பு

கிளிநொச்சி, செப்.3

போரின் பின்னர் மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக வெடிபொருள்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

முகமாலை, இந்திராபுரம் போன்ற கிராமங்களில் மிக நீண்டகாலம் போர் இடம்பெற்றுள்ளது. அங்கு வெடிபொருள்கள் அகற்றப்பட்ட பகுதிகள் படிப்படியாக மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளன. அவற்றில் மக்கள் வீடுகளை அமைத்துள்ளனர். தற்போது அந்தப் பகுதிகளில் தொடர்ச்சியாக வெடிபொருள்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. (ஒ-4-6)

## ஐ.நா. ஆணையாளருக்கு கடிதம் பெயரெடுப்பதில் கடும் போட்டி!

பொறுப்புக்கூறல் விடயங்களில் இலங்கை அரசின் பின்னடிப்புக்களைச் சுட்டிக்காட்டி ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் மிச்செல் பச்லெட்டுக்கு தமிழ்த் தரப்புகள் கடிதங்களை அனுப்பவுள்ளன என்று தெரிகின்றது.

அதேநேரம், இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இரு விதமான வெவ்வேறு முயற்சிகள் நடந்து வருகின்றன என்று தகவல்கள் கசிந்துள்ளன.

நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான வாய்மொழி அறிக்கை ஒன்றை ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ளார். ஆணையாளர் தனது அறிக்கையில் உள்ளடக்க வேண்டிய விவகாரங்களைச் சுட்டிக்காட்டி அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் சார்பில் கடிதம் ஒன்றை அனுப்ப வேண்டும் என்று ரெலோ முயற்சித்து வருகின்றது.

இந்த முயற்சிகள் நடைபெற்றுவரும் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தரப்பில் இதைப்போன்ற முயற்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

ரெலோ, ஆணையாளருக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தைத் தயாரித்து, தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களைப் பெறத் திட்டமிட்டுள்ளது. கடித வரைபு தயாரிக்கப்பட்டு இப்போது அது அனைத்து கட்சிகளின் தலைவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அவர்களின் கருத்துக்களைப் பெறவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என ரெலோத் தரப்பு கூறுகின்றது.

அரசியல் தீர்வு, அரசியல் கைதிகள் விடயம், காணி விடுவிப்பு, ஆக்கிரமிப்பு போன்ற விடயங்கள் அந்தக் கடித வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தற்போது எம்.ஏ.சுமந்திரன் தரப்பால் இன்னொரு வரைவு தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த வரைவும் ஏனையோரின் பார்வைக்காக அனுப்பப்படும் என்று தெரிகின்றது. (எ-இ)

# 500 கிராம அலுவலர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி

*அவர்களில் ஐவர் உயிரிழப்பு*

கொழும்பு, செப். 3

இலங்கையில் இதுவரை சுமார் 500க்கும் மேற்பட்ட கிராம அலுவலர்கள் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டுள்ளனர். அவர்களில் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பிரதம செயலாளர் எஸ்.ஏ.சீலமன்ஆராச்சி, இந்த விடயம் குறித்து சுதேச விவகார இராஜாங்க அமைச்சின் செயலாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:

கிராம உத்தியோகத்தர் ஒருவர் தனிமைப்படுத்தலில் இருந்தால் இதுவரை வழங்கப்பட்டு வந்த 10 ஆயிரம் ரூபா உலர் உணவுப் பொருள்கள் தற்பொழுது [illegible] ஈட்டும் மக்களுக்கு [illegible] வழங்கப்படுகின்றமையினால் குடும்பத்துடன் தனிமைப்படுத்தலில் இருக்கும் கிராம உத்தியோகத்தர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். கிராம உத்தியோகத்தர்களும் பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தங்களது கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு கடமைகளில் ஈடுபட்டு வரும் கிராம உத்தியோகத்தர்களுக்கும் நிவாரணங்களை வழங்க வேண்டும் -என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடலங்களை எரியூட்ட மின்தகன வசதியில்லை

## முல்லை. மக்கள் சிரமம்

முல்லைத்தீவு, செப்.3

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை எரியூட்டுவதற்கு மின்தகன வசதியின்மையால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.
இது தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவிக்கையில்,
வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் மின்சாரம் மூலம் சடலங்களை எரியூட்டுவதற்கான வசதிகள் உள்ளன.
எனினும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் மின்சாரம் மூலம் சடலங்களை எரிப்பதற்கான வசதிகள் இல்லை.
தற்போது கொரோனாத் தொற்றுக் காரணமாக இறப்புகள் நிகழ்கின்ற போது, முல்லைத்தீவில் இருந்து வவுனியாவுக்குச் சடலங்கள் கொண்டு செல்லப்படுகின்றன.
இதன் காரணமாக பொருளாதார ரீதியான நெருக்கடிகள் இறப்புக்களை எதிர்கொள்கின்ற குடும்பங்களுக்கு ஏற்படுகின்றன. முல்லைத்தீவில் மின்சாரம் மூலம் உடல்களை எரிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டால், பெருமளவு சிரமங்கள், அலைச்சல்கள் மக்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் ஏற்படாது -என்றார். (ஒ-4-13)

# உதவித் திட்டங்கள் புறக்கணிப்பு இந்தியாவுக்கே செல்ல விருப்பம்!

## தாயகம் திரும்பிய குடும்பத்தின் நிலை

**கிளிநொச்சி, செப். 3**

**இந்தியாவின் கன்னியாகுமாரி மாவட்டத்தில் உள்ள கலியகாவலன் அகதி முகாமில் இருந்து தாயகம் திரும்பிய குடும்பமொன்று, வறுமையின் கோரத்தாலும் உதவித் திட்டங்கள் புறக்கணிக்கப்படுவதாலும் மீண்டும் அகதிகளாக இந்தியாவுக்கே செல்ல விருப்பம் தெரிவித்துள்ளது.**

கிளிநொச்சி ஐயங்கன்குளம் கிராமத்தில் வசிக்கும் குடும்பமொன்றே இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.
கடந்த 2017ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய போதிலும் தமக்குப் போதுமான உதவிகள் அரசால் செய்து தரப்படவில்லை என்று அந்தக் குடும்பம் குற்றஞ்சாட்டுகின்றது.
வீட்டுக்கு ஒரு கதவு பொருத்துவதற்குக்கூட உரிய வசதி இல்லாமல் அல்லற்படுகின்றோம்.
ஒரு வேளை உணவை மூன்று வேளைகளுக்கும் வைத்து உண்ண வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.
எனவே உரிய அதிகாரிகள் எமது துயர் துடைக்க முன்வர வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர். (ம-113)

# பொலிஸ் நிலையம் அருகேயே கைவரிசையைக் காட்டிய கில்லாடிகள்

யாழ்ப்பாணம், செப். 3

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள ஆலயத்திலிருந்து மோட்டர் திருடப்பட்டுள்ளது.
இதேபோன்று வேறு பகுதிகளிலும் மோட்டர்கள், தண்ணீர் பவுசர் ஆகியவற்றைத் திருடிய சந்தேக நபர்களை வல்வெட்டித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
வீடொன்றிலிருந்து தண்ணீர் இறைக்கும் மோட்டரும், இன்னொரு வீட்டில் ஆயிரம் லீற்றர் தண்ணீர் பவுசரும், ஆலயத்திலிருந்து மோட்டரும் களவாடப்பட்டிருந்தன.
இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.
விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் 17, 18, 39 வயதுகளை உடைய 3 சந்தேகநபர்களைக் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தினர்.
தலா 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையிலும் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.
களவாடப்பட்ட பொருள்களை பொலிஸார் மீட்டுள்ளனர். (ஒ-26)

# நாயாற்றில் குவியும் வெளிமாவட்ட மீனவர்கள்

## உள்ளூர் மீனவர்கள் விசனம்

முல்லைத்தீவு, செப்.3

கொரோனாத் தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில், வெளிமாவட்ட மீனவர்களின் வருகை மீண்டும் அதிகரித்துள்ளது.
இது தொடர்பில் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவிக்கையில், முடக்க காலத்திலும் நாயாற்றுப் பகுதிக்கு வெளிமாவட்ட மீனவர்கள் வருகைதருகின்றனர். இதனால் எமது பகுதி மீனவர்கள் மிகவும் அச்சமடைந்துள்ளனர்.
கடந்த ஜூன் மாதம் செம்மலை கிழக்கு நாயாற்றுப்பகுதியில் உள்ள வெளிமாவட்ட மீனவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஐவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதனையடுத்து அந்தப் பகுதி முடக்கப்பட்டிருந்தது.
தனிமைப்படுத்தப்பட்டிருந்த வெளிமாவட்ட மீனவர்கள் தாம் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அதனையடுத்து தனிமைப்படுத்தல் தளர்த்தப்பட்டது. அவர்கள் ஓகஸ்ட் மாதம் ஆரம்பப் பகுதியில் நாயாற்றிலிருந்து தமது சொந்த இடங்களுக்குச் சென்றிருந்தனர்.
தமது சொந்த இடங்களுக்குச் சென்ற வெளிமாவட்ட மீனவர்கள் மீளவும் தற்போது நாயாற்றுப் பகுதிக்கு வருகை தருகின்றனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைய நாள்களாக கொரோனாப் பெருந்தொற்றின் தாக்கம் வேகமாக அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.
இந்த நிலையில் வெளிமாவட்டங்களிலிருந்து நாயாற்றுக்கு மீனவர்கள் வருகை தருவது முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பெரும் ஆபத்தைத் தோற்றுவிக்கும்.
நாடு முடக்கப்பட்டுள்ள போது வெளிமாவட்டங்களிலிருந்து மீனவர்கள் எவ்வாறு நாயாற்றுப் பகுதிக்கு வருகை தருகின்றனர். இவர்களுக்குரிய அனுமதியை வழங்கியது யார்? இவர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய பாதுகாப்புத் தரப்பினரும், உரிய அரச திணைக்களங்களும் என்ன பார்த்துக் கொண்டிருக்கின்றனர்?
பதற்றமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பாதுகாப்புத் தரப்பினரும், வெளிமாவட்ட மீனவர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் உள்ளிட்ட திணைக்களங்களும் கரிசனையுடன் செயற்படவேண்டும். முடக்கத்தை முறையாக நடைமுறைப்படுத்தவேண்டும் -என்றார். (ஒ-4-246)

# உரிமையாளரைக் கண்ட திருடன் தலைமறைவு

பல்பொருள் விற்பனை நிலையமொன்றில் இடம்பெறவிருந்த திருட்டுச் சம்பவம், உரிமையாளர் சென்றதால் தவிர்க்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் ஆரியகுளத்துக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.
குறித்த கடைக்குள் திருடன் உள்நுழைந்ததை அறிந்த, கடை உரிமையாளர் அங்கு விரைந்துள்ளார். உரிமையாளர் வருவதையறிந்து திருடன் அங்கிருந்து தலைமறைவாகியுள்ளார். கடை உரிமையாளர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை அடுத்து விசாரணைகளின் அடிப்படையில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-4-20)

# சங்குப்பிட்டிப்பாலம் உடனடியாக சீரமைப்பு

## மக்கள் அச்சமின்றிப் பயணிக்கலாம்



கிளிநொச்சி, செப்.3

சேதமடைந்திருந்த சங்குப்பிட்டிப் பாலம், முழுமையாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது. எனவே மக்கள் அச்சம் இன்றிப் பயணம் செய்ய முடியும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பாலங்கள் அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு உதவிப்பணிப்பாளர் வு.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சங்குப்பிட்டிப் பகுதியில் அமைந்துள்ள பாலம் ஆபத்தான நிலைமையை நோக்கிச் செல்கின்றதா என்று மக்கள் சந்தேகம் வெளியிட்டிருந்தனர்.
யாழ்ப்பாணத்தையும், கிளிநொச்சியையும் இணைக்கும் குறித்த பாலம் 2011 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. பெரும் நிதிச் செலவில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த பாலம் சேதமடைந்து வருவதை அவதானிக்க முடிந்தது.
பாலம் அமைந்துள்ள பகுதியில் காணப்படும் கொங்கிரீட்டிலான பகுதிகளில் வெடிப்புகளும் பாலம் துருப்பிடித்து சிதைவுகளும் ஏற்பட்டிருந்தன.
இதனையடுத்து வீதி அபிருத்தி அதிகார சபையின் பாலங்கள் அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு உதவிப்பணிப்பாளர் வு.வசந்தகுமார் மற்றும் வட மாகாண பணிப்பாளர் குரூஸ் உள்ளிட்டோர் களநிலைமைகளைப் பார்வையிட்டனர்.
குறித்த பாலத்தில் பயணிப்பது தொடர்பில் மக்கள் அச்சம் அடையத் தேவையில்லை. அதில் காணப்படும் சிறிய சேதங்களைப் பாதுகாக்கும் ஆரம்பப் பணிகளை முன்னெடுத்துள்ளோம். 120 ஆண்டுகள் பாவனைக்கு ஏற்ற வகையில் பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது சேதம் ஏற்பட்டுள்ளது என்று கருதப்படும் பகுதிகள் உவர் காற்றால் ஏற்பட்ட சிறிய பாதிப்புக்களே ஆகும். இது தொடர்பில் மக்கள் அச்சப்பட வேண்டியதில்லை. 2011 ஆம் ஆண்டு திறக்கப்பட்ட குறித்த பாலத்தை 2016 ஆம் ஆண்டு திருத்தம் செய்தோம். 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தங்களைச் செய்வோம். தற்பொழுது ஆரம்ப திருத்தப் பணிகளைச் செய்கின்றோம். எனவே பாலத்தின் ஊடாக போக்குவரத்துச் செய்வதற்கு மக்கள் அச்சம் அடையத் தேவையில்லை. அங்கு பொருத்தப்பட்டுள்ள சூரிய ஒளி வீதி மின்விளக்குகளும் சீர் செய்யப்படும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எல்லாமே அவர்கள் செயலா?

'உலர விட்டிருந்த என் காலுறையைக் காணவில்லை. ஆகவே, ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்புத்தான் அதைத் திருடியிருக்க வேண்டும்' இவ்வாறான நகைச்சுவைகள் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவிலும் மேற்கத்தேய நாடுகளிலும் கொடிகட்டிப் பறந்தன. தற்போது ஆசியாவில் இடம்பெறும் சம்பவங்கள் பலவும் அந்த நகைச்சுவைகளைத்தான் கண்முன் கொண்டுவருகின்றன.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதி கொல்லப்படாத அந்தக் காலத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு வலுவாகத்தான் இருந்தது. இதனால், உலகின் எந்த மூலையில் என்ன தாக்குதல் நடந்தாலும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புத்தான் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்குமோ (!?) என்ற சந்தேகம் உடனும் ஏற்படுத்தப்பட்டுவிடும். ஒருகட்டத்தில் இந்த எதிர்வுகூறல்களைப் பொறுத்துக்கொள்ள முடியாத சமூக வலைத்தளப் பாவனையாளர்கள், 'உலரவிட்டிருந்த காலுறையைக் காணவில்லை. ஆகவே ஐ.எஸ்.ஐ.எஸ்.தான் எடுத்திருக்க வேண்டும்', 'குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்த மிகுதிப் பீட்சாவைக் காணவில்லை. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கைவரிசைதான் இது' என்றெல்லாம் கேலி செய்யத் தொடங்கினார்கள்.


சமூக வலைத்தளப் பாவனையாளர்களின் இந்த உச்சக்கட்ட நகைச்சுவைகளுக்கும், கேலிகளுக்கும் பின்னர்தான், என்ன தாக்குதல் நடந்தாலும் உடனடியாக அதை ஐ.எஸ்ஸுடன் கோர்த்துப் பார்க்கும் அமெரிக்க மற்றும் மேற்கத்தேய அரசுகளின் 'பயந்த மனோபாவம்' கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கியது. இத்தகைய ஒரு மனநிலை ஆசிய வட்டகையிலும் கடந்த சில ஆண்டுகளாகவே இருக்கின்றது. அதுதான் 'புலிப்பீதி'.

கேரளாவின் திருவனந்தபுரத்தின் அருகே கடந்த சில மாதங்களுக்கு முன்னர் 300 கிலோ ஹெரோய்ன் மற்றும் ஒரு தொகுதி ஆயுதங்கள் என்பன இந்தியப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. இந்தக் கடத்தலுக்கு மூளையாகச் செயற்பட்டவர் என்ற அடிப்படையில் இலங்கைத் தமிழரான ராஜன் என்பவர் கைதுசெய்யப்பட்டார். அவரின் வலைப்பின்னலை ஆராய்ந்தபோது புலிகளை மீளுருவாக்கம் செய்யவேண்டும் என்ற அனுதாபமுள்ள குழுக்களுடன் அவருக்குத் தொடர்புள்ளது தெரியவந்தது என்றும், இதனால் இந்தக் கடத்தல் புலிகளை மீளுருவாக்கம் செய்வதற்கான முயற்சியாக இருக்கலாம் என்றும் இந்தியப் பொலிஸார், புலனாய்வுத் துறையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

புலிகள் என்ற பெயரைக் கேள்விப்பட்டால், இலங்கை அரசுக்குக் காய்ச்சல் வருகின்றதோ இல்லையோ இந்திய, மலேசிய அரசுகளுக்குக் காய்ச்சல் வந்துவிடுவதுண்டு. குறித்த கடத்தல் புலிகளுடன் தொடர்புபட்டது, அவர்களைப் புத்துயிர்ப்பிக்கும் எண்ணம் கொண்டது என்றால் அதை உரிய ஆதாரங்களுடன் எண்பிக்க வேண்டுமே தவிர ஏதோவொரு பாதாள உலகக்குழுவுடன் கடத்தல்காரர்களுக்குத் தொடர்புண்டு என்பதற்காக பொத்தம்பொதுவான குற்றச்சாட்டுக்களை எடுத்த எடுப்பில் முன்வைத்துவிட முடியாது. புலிகளுடன் தொடர்புபட்ட வலையமைப்புத்தான் இதை மேற்கொண்டது, புலிகளைப் புத்துயிர்ப்பிக்கும் எண்ணத்துடன்தான் இந்தக் கடத்தல் நடத்தப்பட்டது என்பதற்கான எந்த ஆதாரங்களும் இல்லாமல், தங்கள் கற்பனையில் உதித்த காரணத்தைச் சொல்லி கடத்தல் வழக்கை முடிக்கும் போக்கே இதுவெனலாம்.

மாறாக, பொத்தம்பொதுவான குற்றச்சாட்டுக்களாலும் பொதுவாகப் பூசப்படும் புலிச்சாயங்களாலும் உண்மையான குற்றவாளிகளும் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய பாதளஉலகக் குழுவினரும் தப்பிவிடுவதற்கும், அவர்கள் தொடர்ந்தும் இன்னும் இமாலயமான கடத்தல்களை மேற்கொள்வதற்கும் அது வாய்ப்புக்களை ஏற்படுத்தும். தெளிவான தகவல்களும், துல்லியமான எண்பித்தல்களும்தான் இங்கு தேவையேயன்றி பொத்தம்பொதுவான விரல்நீட்டல்கள் அல்ல.

இந்தியாவில் எதற்கெடுத்தாலும், 'எதிர்க்கட்சிகளின் சதிதான் இது' என்ற ஆளுங்கட்சிக்காரர்களின் சப்பைக்கட்டுக்கள் போன்று, எதற்கெடுத்தாலும் புலிச்சாயத்தைப் பூசிவிடுவதும் இப்போது ஒரு புதுக்கலாசாரமாக மாறிக்கொண்டுவருகின்றது. இந்த மனோநிலையில் இருந்து எப்போது இந்த நாடுகள் எல்லாம் விடுபட[illegible]னவோ? எல்லாம் ஆண்டவனுக்கே வெளிச்சம்.



# சுகாதார அதிகாரிகளுடன் ஒத்துழைப்பது கட்டாயம்!

## அன்டிஜென், பி.சி.ஆர். குழப்ப விவகாரத்தில் யாழ்ப்பாணம் நீதிமன்று கட்டளை

**யாழ்ப்பாணம், செப்.3**

**கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்ட பெண் அரச அதிகாரி ஒருவர், சுகாதாரப் பரிசோதகர்களுக்கு ஒத்துழைப்பு வழங்காததை அடுத்து, நீதிமன்றக் கட்டளை பெறப்பட்டுள்ளது என்று அரியாலை பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.**

நாட்டில் நடைமுறையில் உள்ள சுகாதாரக் கட்டுப்பாடுகளின் கீழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கடமைக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அவர்களால் கோரப்படும் விவரங்களை வழங்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது.

மாகாண அமைச்சு ஒன்றில் கடமையாற்றும் பெண் அதிகாரி ஒருவருக்குக் கடந்த 16ஆம் திகதி அலுவலக மட்டத்தில் அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் அவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்பின்னர் தொற்று உறுதி செய்யப்பட்ட அரச அதிகாரி, தனது தனிப்பட்ட முயற்சியின் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டுள்ளார். அதில் அவருக்குத் தொற்று உறுதி செய்யப்படவில்லை.

அதையடுத்துப் பெண் அதிகாரியின் கணவரான அரச அலுவலர் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் அறிவுறுத்தப்பட்ட சுயதனிமைப்படுத்தல் நடவடிக்கைளைப் பின்பற்றவும், குடும்ப விவரங்களை வழங்கவும் மறுத்துள்ளார்.

அதேநேரம், பெண் அரச அலுவலருக்குத் தொற்று உள்ளது என்று யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் குழப்ப நிலைமையை அடுத்து, பெண் அரச அலுவலரின் குடும்பத்தினர் அன்டிஜென் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அழைக்கப்பட்டனர். ஆயினும் அந்தக் குடும்பம் அங்கு சமுகமளிக்கவில்லை.

அதையடுத்து, தங்கள் கடமைக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை, கோரப்பட்ட விவரங்களை வழங்கவில்லை ஆகிய காரணங்களை முன்வைத்து யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் விண்ணப்பம் செய்யப்பட்டது. விண்ணப்பத்தை ஆராய்ந்த யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்று மேற்கண்ட கட்டளையை வழங்கியது. (எ-26)

# தலிபான்களின் எழுச்சி இலங்கைக்கு தலையிடி

## ஞானசார தேரர் எச்சரிக்கை

கொழும்பு, செப்.3

ஆப்கானிஸ்தானில் மீண்டும் தலிபான் அமைப்பு எழுச்சி கொண்டுள்ள நிலையில், இலங்கையில் 70 வீதம் ஆதிக்கம் பெற்றுள்ள இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்கள் வலுப்பெறும் என்று பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தப்லிக் ஜமாத் அமைப்பை அரசு தடை செய்ய வேண்டும். இஸ்லாமிய அடிப்படைவாதக் கொள்கையுடைய அமைப்புக்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.


ஈஸ்டர் [illegible] தாக்குதலுக்குப் பின்னர் நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதம் முற்றாக இல்லாமல் போயுள்ளது என்று ஒருபோதும் கருதக்கூடாது. தலிபான் அமைப்பின் கொள்கையால் ஈர்க்கபட்டுள்ள இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்கள் இலங்கையிலும் உள்ளன.

முக்கியமாகத் தப்லிக்ஜமாத் அமைப்பைக் குறிப்பிடவேண்டும். இந்த அமைப்பை அரசு உடனடியாகத் தடைசெய்யவேண்டும். இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதம் பகிரங்கமாகச் செயற்படுகிறது என்பதைப் பலமுறை ஆதாரங்களுடன் வெளிப்படுத்தினோம். அதைக் கணக்கிலெடுக்காது விட்டமையே ஈஸ்டர் தினத் தாக்குதலுக்குக் காரணமாயிற்று.

அரசு ஆப்கானிஸ்தான் நிலைமையைக் கருத்தில் கொண்டு இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்கள் தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பியோடிய தொற்றாளர்களால் 35 பேருக்கு கொரோனாத் தொற்று



வவுனியா, செப். 3

**தப்பியோடிய கொரோனாத் தொற்றாளர்கள் மூவர் கிராமத்தில் நடமாடித் திரிந்ததால் 35 பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. வவுனியா தெற்கு சிங்கள சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.**

இந்தப் பகுதியைச் சேர்ந்த மூவர் உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவமனைக்குச் சென்றனர். அவர்களுக்கு அன்டிஜென் சோதனை முன்னெடுக்கப்பட்டபோது தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெறாமல் தப்பிச் சென்றனர்.

சுகாதாரப் பிரிவினர் அவர்களை தேடுதல் நடத்திப் பிடித்திருந்தனர். அத்துடன் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என 7 பேரைத் தனிமைப்படுத்தினர்.

தனிமைப்படுத்தப்பட்டவர்கள் அதனையும் மீறிக் கிராமத்தில் உலாவித் திரிந்துள்ளனர்.

இதனையடுத்து சுகாதாரப் பிரிவினர் அந்தப் பகுதியைச் சேர்ந்த 150பேருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொண்டனர்.

இதன்போது 35 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஒ-110)




# கிளினிக் நோயாளர்களுக்கு தபால் மூலமாக மருந்துகள்

மன்னார், செப்.3

மன்னார் பொது மருத்துவமனையில், வழமையான கிளினிக் இடம்பெறுகின்ற போதும், நோயாளர்களுக்கான மருந்துகள் தபால் மூலம் அனுப்பப்படுகின்றன என்று மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி செந்தூர்பதிராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையில் வழமைக்கு மாறாகக் கடந்த மாதம் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை மருத்துவமனைக்கு காய்ச்சல், தடிமன், சளி உள்ளிட்ட அறிகுறிகளுடன் வருவோருக்கு உடனடியாகக் கொரோனாப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவர்களை மருத்துவமனையில் தங்கவைத்து சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற அவசியம் ஏற்படும் பட்சத்தில் மட்டும் அவர்கள் தங்கவைக்கப்படுகின்றனர்.

மாவட்டத்தில் 19 இறப்புக்கள் பதிவாகியுள்ளன. 30 க்கும் மேற்பட்டோர் கொரோனாத் தொற்றாளர்களாகச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனவே இவ்வாறான நிலை தொடராதிருக்க மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். சுகாதார நடைமுறைகளை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும். தேவையற்ற முறையில் வெளியில் நடமாடுவதைத் தவிர்க்க வேண்டும்.

மருத்துவமனையில் கிளினிக் சம்பந்தமாக வந்து செல்வோர் வழமைபோன்று தங்களுக்குரிய சிகிக்சையைப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு வர முடியாதவர்களுக்குத் தபால் மூலம் மருந்துகள் அனுப்பப்படுகின்றன. கிளினிக் சம்பந்தமாக வருவோர் மருத்துவமனைக்கு வருவதைத் தவிர்த்துக் கொள்வது விரும்பத்தக்கது. அவசியம் மருத்துவரைச் சந்திக்கத்தான் வேண்டும் என்றால் சுகாதார நடைமுறைகளைக் கவனத்தில் கொண்டு வரமுடியும். -என்றார். (ஒ-4-60)

# பொறுப்பற்ற அதிகாரியால் மக்களுக்குப் பெரும் பாதிப்பு

## சமூக ஆர்வலர்கள் விசனம்

சாவகச்சேரி, செப்.3

தென்மராட்சியில் கொரோனாத் தொற்றுத் தீவிரமடைந்து வரும் நிலையில், பொறுப்பற்ற அதிகாரிகள் சிலர், அரச உத்தியோகத்தர்களை ஒன்றாக அழைத்துக் கூட்டங்களை நடத்தி வருவதால், கொரோனாத் தொற்று மேலும் பரவலடைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலர்களுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டு பிரதேச செயலக பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தென்மராட்சிப் பிரதேச செயலர், கிராம மட்ட உத்தியோகத்தர்களை அழைத்து பிரயோசனமற்ற சந்திப்புக்களை நடத்தி வருகின்றார். கொடிகாமம் சமுர்த்தி வங்கி வலயத்துக்குரிய கிராம அலுவலர்கள், கைதடி சமுர்த்தி வங்கி வலயத்துக்குரிய கிராம அலுவலர்கள்,சாவகச்சேரி சமுர்த்தி வங்கி வலயத்துக்குரிய கிராம அலுவலர்கள் இவ்வாறு கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் சமூகத்தொற்று ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே இங்கு கடமையாற்றும் கிராம அலுவலர்கள் 6 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் நோய் அறிகுறிகளுடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த நிலையிலும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, கலந்துரையாடலுக்கு வருமாறு உத்தியோகத்தர்கள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

உரிய அதிகாரிகள் சமூக அக்கறை எடுத்துப் பிரதேச செயலரின் பொறுப்பற்ற செயலை இனி வருங்காலங்களில் என்றாலும் நிறுத்தி பிரதேச மக்களைக் காப்பாற்றுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாகத் தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, தற்போதைய சூழ்நிலையில் மக்கள் தடுப்பூசி ஏற்றுவது குறைவாக உள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரியின் பங்குபற்றுதலோடு சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து நான்கு கட்டங்களாகக் கிராம மட்ட உத்தியோகத்தர்களை அழைத்துத் தடுப்பூசி ஏற்றுவது தொடர்பான அறிவுரைகள் வழங்கப்பட்டன என்று பதிலளித்தார். (ஒ-4-159)

# நெற்களஞ்சியங்கள் சீல் வைக்கப்பட்டன

வவுனியா, செப். 3

வவுனியா தாண்டிக்குளம் மற்றும் கொறவப் பொத்தானை வீதிகளில் அமைந்துள்ள இரண்டு தனியார் நெற்களஞ்சிய சாலைகளுக்கு நேற்று முன்தினம் சீல் வைக்கப்பட்டது.

வவுனியா பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினர் அவற்றுக்குச் சீல் வைத்தனர்.

நாட்டில் கொரோனாத் தொற்று பரவலடைந்துவரும் நிலையில் உணவுப் பொருள்களின் விலையும் அதிகரித்துவருகின்றது. இந்தநிலையில் நாட்டிலுள்ள தனியார் நெற்களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல் தொடர்பான தகவல்களை வழங்குமாறு அரசு அறிவித்திருந்தது.

எனினும், அரசு அறிவித்த கால எல்லைக்குள் குறித்த தகவல்களை வழங்காத இரண்டு நெற்களஞ்சிய சாலைகளையே வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் சீல் வைத்தனர்.

இதேவேளை, குறித்த களஞ்சிய சாலைகளில் உள்ள நெல்லை, நெல் சந்தைப்படுத்தும் சபை நிர்ணய விலை செலுத்திக் கொள்வனவு செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-110)



# வினாத்தாள்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், செப்.3

காங்கேசன்துறை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகத்தினரால், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு, கடந்த கால வினாத்தாள்கள் வழங்கப்பட்டன.

பண்டத்தரிப்புச் சாந்தை சிற்றம்பலம் வித்தியாலய மாணவர்களுக்கே இவை வழங்கப்பட்டன.

கழக முன்னாள் தலைவர் லயன். ஜெயரத்தினம் சிவானந்தன் இவற்றைப் பாடசாலை அதிபரிடம் கையளித்தார். (4-9)



# யாழ்.போதனா மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சுவிஷேசக ஐக்கியத்துவத்தால், அதன் ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தின் நிவாரணம் மற்றும் அபிவிருத்திப் பிரிவினூடாக, யாழ்.போதனா மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

கொரோனாத் தொற்றாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைகள் மற்றும் நிலையங்களுக்கான மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட 'உயிர்களைப் பாதுகாப்போம்' எனும் திட்டத்தின் ஊடாக இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் எஸ். சிறிபவானந்தராஜா மற்றும் மருத்துவமனையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் ஆகியோரிடம், ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தின் இயக்குநர் ரகு பாலச்சந்திரன் குறித்த உபகரணங்களைக் கையளித்தார். (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்தக் கட்டுரை யாழ்ப்பாண மருத்துவர் சங்கத்தினால் காலத்தின் தேவை கருதி வெளியிடப்படுகின்றது.**

# கொரோனாத் தொற்றுச் சந்தேகமா? செய்யவேண்டியது என்ன?

நீங்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இருந்தாலோ அல்லது தொற்றுக்குள்ளாகி இருப்பதாக சந்தேகம் இருந்தாலோ உங்களிலிருந்து தொற்றானது பிறருக்குப் பரவுவதற்கான ஆபத்து உள்ளது. உங்கள் அன்பிற்குரியவர்களுக்குத் தொற்றுப் பரவாமல் இருப்பதற்கு முறையான முற்காப்புக்களை மேற்கொள்ள வேண்டும்.

1. நீங்கள் தொற்றுக்கு உள்ளாகியிருப்பதாக சந்தேகப்படுகிறீர்களா?
2. கொரோனா பி.சி.ஆர் அல்லது துரித அன்டிஜென் பரிசோதனையில் நீங்கள் தொற்றுக்குள்ளாகி உள்ளமை கண்டறியப்பட்டதா?
3. தொற்றாளர் ஒருவருக்கு நெருக்கமானவரா?

மேலுள்ள வினாக்களில் ஏதாவது ஒன்றுக்காவது உங்களது பதில் ஆம் எனில், பரிசோதனையில் நீங்கள் தொற்றுக்குள்ளாகி உள்ளவர் என்று உறுதிசெய்யப்பட்ட நாளில் இருந்து 14 நாள்களுக்கு உங்களை நீங்களே வீட்டில் சுயதனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும். அத்துடன் உங்கள் பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அல்லது சுகாதார மருத்துவ அதிகாரி ஆகியோருக்கும் இது தொடர்பாக அறிவிக்க வேண்டும்.

தொற்றுக்கு உள்ளாகியவர்களில் பெரும்பான்மையானவர்களால் இலேசான நோய் அறிகுறிகள் மட்டுமே உணரப்படும்.

1. காய்ச்சல்
2. இருமல்
3. தொண்டை அரிப்பு
4. தடிமன் (மூக்கால் நீர் வடிதல்)
5. தலைவலி
6. தசை மற்றும் மூட்டு வலி
7. குமட்டல் (வயிற்றுப் பிரட்டல்)
8. வாந்தி (சத்தி) வயிற்றோட்டம் (வயிற்றால் போதல்)
9. மணம் அறியும் ஆற்றலை இழத்தல், சுவை அறியும் ஆற்றலை இழத்தல்
10. உணவு அருந்தும் விருப்பத்தை இழத்தல்
11. உடற்சோர்வு (சோம்பல்)

உங்களுக்குக் கீழ்க்காணும் நோய் அறிகுறிகளில் எவையாவது காணப்பட்டால், உங்களது நோயானது கடுமையான கட்டத்தில் இருக்கக்கூடும். எனவே நீங்கள் மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளவோ அல்லது மேலதிக பரிசோதனைகளுக்காக மருத்துவமனைக்கு செல்லவோ வேண்டும்.

- கடுமையான காய்ச்சல் அல்லது தொடர்ச்சியாக 3 நாள்களுக்கு மேலாகத் தொடரும் காய்ச்சல்
- ஓய்வாக இருக்கும்போது அல்லது இலேசான உடல் தொழிற்பாடுகளின்போது மூச்சு எடுப்பதற்கு சிரமமாக இருத்தல் (உதாரணமாக பல தடவைகள் இருந்து எழும்பிய பின்னர் அல்லது சிறிதளவு தூரத்துக்கு நடந்த பின்னர்)
- தொடர்ச்சியான நெஞ்சுவலி அல்லது நெஞ்சுப்பாரம்






- மயக்கம்
- தொடர்ச்சியான வாந்தி (சத்தி) அல்லது வயிற்றோட்டம்
- சிறுநீர் வெளியேறுவது குறைவடைதல்
- சடுதியாக உங்களது நோய் அறிகுறிகள் மோசமடைதல்
- நீரிழிவு (சலரோகம் அல்லது சீனி வருத்தம்), உயர் குருதி அமுக்கம் மற்றும் இதயநோய் போன்ற தொற்றாநோய்கள் உள்ளவர்களுக்கு அந்த நோய்கள் கடுமையாகுதல்.

மேலுள்ள ஏதாவது அபாய நோய் அறிகுறிகள் உங்களுக்கு ஏற்பட்டால் 247 என்ற இலக்கத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.

அவசர நிலைமைகள் ஏற்பட்டால் மருத்துவமனைக்குச் செல்வதற்கு சுவசரிய நோயாளர் காவுவண்டிச் சேவை இலக்கம் 1990 இனை அழையுங்கள்.

வீட்டில் வசிக்கும் மற்றவர்களிடமிருந்து உங்களை நீங்களே தனிமைப்படுத்திக் கொண்டிருக்கும் போது கீழே தரப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றவும்:

- வீட்டிலுள்ள மற்றவர்களிடமிருந்து விலகி அல்லது தனியாக இருப்பதை உறுதிப்படுத்தவும்.
- போதியளவு ஓய்வு எடுப்பது மிகவும் அவசியமானதாகும்.
- ஆரோக்கியமான நீராகாரங்களைப் போதுமானளவு அருந்தவும் தினமும் 22.5 லீற்றர் வரை. அத்துடன் சத்துள்ள உணவை எடுக்கவும்.
- காய்ச்சலுக்கு 1000 மில்லிகிராம் பரசிற்றமோலை (ஆகக் கூடியது இரண்டு மாத்திரைகள் அல்லது குளிசைகள்) ஆறு மணித்தியாலத்துக்கு ஒருதடவை பாவிக்கவும். சிறுவர்களுக்கு அவர்களது உடல் நிறைக்கு ஏற்றவாறு பரிந்துரைக்கப்பட்ட அளவை வழங்கவும்.
- நீரிழிவு (சலரோகம் அல்லது சீனி வருத்தம்), உயர் குருதி அமுக்கம், இதய நோய்கள் மற்றும் பிற நோய்களுக்கு நீங்கள் வழக்கமாக பாவிக்கும் மருந்துகளைத் தொடர்ந்து எடுங்கள்.
- உங்களது மருத்துவர் பரிந்துரைத்த மருந்துகளை மட்டும் பாவியுங்கள். உங்கள் உள ஆரோக்கியத்தில் கவனம் எடுங்கள்.
- உங்கள் அன்பிற்குரியவர்களுடன் தொலைபேசி, மின்னஞ்சல் மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாக அல்லது வட்சப் மற்றும் சூம் முதலிய காணொளித் தொழில்நுட்பங்களைப் பாவித்துத் தொடர்பில் இருங்கள்.
- உங்களது நாளாந்த அலுவல்களை மேற்கொள் [illegible] ஆடை [illegible] உணவு வகைகளை உட்கொள்ளுதல்.
- புத்தாக்க முயற்சிகளில் அல்லது தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் போது கிடைக்கும் நேரத்தில் புதிய நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

உங்களது அன்பிற்குரியவர்களுக்குத் தொற்றுப் பரவாமல் இருப்பதற்குப் பின்வரும் முற்தடுப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுங்கள்.

- வீட்டில் வசிக்கும் மற்றையவர்களில் இருந்து தொலைவில் இருக்கும் நல்ல காற்றோட்டம் உள்ள அறையில் தங்குங்கள்.
- சாத்தியம் என்றால், மற்றவர்களால் பாவிக்கப்படாத ஒரு தனியான மலசலகூடத்தை அல்லது குளியல் அறையைப் பாவியுங்கள்.
- உங்களது வீட்டுக்கு அல்லது அறைக்கு ஒருவரும் வராமல் இருப்பதை உறுதிப்படுத்துங்கள்.
- அடிக்கடி உங்களது கைகளை சவர்க்காரமும் நீரும் கொண்டு ஆகக் குறைந்தது 20 வினாடிகளுக்கு கழுவுங்கள்.
- உங்களது அறையில் இருந்து வெளியே செல்லும்போது முகக்கவசத்தை அணியுங்கள்.
- நீங்கள் முகக்கவசத்தை அணியும்போது அதன் முகத்தை மூடும் பாகத்தில் தொட வேண்டாம். உங்களது முகக்கவசம் துவாய்கள், குவளைகள் மற்றும் உணவுத் தட்டுகளை தனியாக உபயோகியுங்கள்.
- பராமரிப்பு வழங்குபவர்கள் அடிக்கடி தொடுகைக்கு உள்ளாகும் மேற்பரப்புகள் (கதவுகள், மலசலகூட மூடிகள் மற்றும் கைகழுவும் தொட்டிகள்) மற்றும் பிற மேற்பரப்புகளைத் தொற்றுநீக்கம் செய்ய வேண்டும்.
- வீட்டில் உள்ள எவராவது இருமும்போது அல்லது தும்மும்போது தங்களது வாயை தமது முழங்கையின் உட்பகுதியால் மூடிக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான தகவல்களை வெளியிட்டு மக்களை குழப்பும் அமைச்சர்கள்

## முடிந்தால் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு ஆசிரியர் தொழிற்சங்கம் சவால்

**கொழும்பு, செப். 3**

**அதிபர், ஆசிரியர் சேவைகளில் காணப்படும் சம்பள பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழு, பிழை யான தகவல்களை வெளியிட்டு மக்களைக் குழப்புவதற்கு முற்படுகின்றது. எனவே, உண்மை நிலைவரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகப் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு உப குழுவுக்குச் சவால் விடுக்கின்றோம். இவ்வாறு இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பொதுச்செயலாளர் மஹிந்த ஜய சிங்க தெரிவித்தார்.**

அமைச்சர்களான விமல்வீரவன்ச, மஹிந்த அமரவீர ஆகியோரால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டின்போது முன்வைக்கப் பட்ட கருத்துக்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு சவால் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மஹிந்த ஜயசிங்க மேலும் கூறியவை வருமாறு,

அமைச்சர்களான விமல் வீர வன்ச, மஹிந்த அமரவீர ஆகி யோர் மக்களைத் திசைதிருப்பும் வகையில் கருத்துக்களை வெளி யிட்டுள்ளனர். மூடி மறைக்காமல் உண்மையைக் கூறுமாறு வலியு றுத்துகின்றோம். 40 ஆயிரம் ரூபா 50 ஆயிரமாக அதிகரிக்கின் றது என்றெல்லாம் அறிவித்தனர். எனவே, உண்மையாகவே எவ்வ ளவு சம்பளம், எப்படி அதிகரிக்கப் படும் என்பதை அவர்கள் குறிப்பி டவில்லை. அமைச்சரவைத் தீர் மானம் தொடர்பில் அதிபர் ஆசி ரியர் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடப்படவில்லை. எனவே, மக்கள் மத்தியில் பிழை யான கருத்து பரப்பப்படுவதை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

நாம் முழு இறாத்தல் இறைச்சியை யும் கேட்பதாக அமைச்சர்கள் கூறுகின்றனர். ஆனால் ஒரு இறாத்தல் இறைச்சியை நான் காகப் பிரித்து அதில் ஒரு பங்கை வழங்குவதற்கே முற்படுகின்றனர். கணக்குத் தொடர்பில் அவர்க ளுக்கு உள்ள தெளிவு என்ன வென்பது மக்களுக்குத் தெரியும். எனவே, பகிரங்க விவாதத்துக்கு வருமாறு சவால் விடுக்கின்றோம். சுபோதினி அறிக்கையின் பிரகா ரம் ஒரே தடவையில் நியாயமான தீர்வைக் கோரினோம். முழு இறாத் தல் இறைச்சியைக் கேட்கவில்லை. அமைச்சர்கள்தான் பொய்யுரைக் கின்றனர். 2018 இல் முன்வைக் கப்பட்ட அறிக்கையைத் திருத்த மின்றி முன்வைத்துள்ளனர், என் றார். (ஒ.44)





# வி.தர்மலிங்கத்தின் நினைவுதினம் அனுஸ்டிப்பு

யாழ்ப்பாணம்,செப்.3

முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் வி. தர்மலிங்கத்தின் 36 ஆவது நினைவு தினம், தாவடியில் உள்ள அவரது நினைவிடத்தில் நேற்று அஞ்சலிக் கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப் பினரும், புளொட் அமைப்பின் தலைவ ருமான தர்மலிங்கம் சித்தார்த்தனின் ஏற் பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவ ரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினருமான மாவை சேனாதிராசா, சுன் னாகம் பிரதேச சபைத் தவிசாளர் மற் றும் பிரதேச சபை உறுப்பினர்கள், ஆத ரவாளர்கள் கலந்து கொண்டனர். கொரோனாத் தொற் றுக் காரணமாக மட் டுப்படுத்தப்பட்ட நபர் களுடன், சுகாதார நடைமுறை களுக்கமைய நினை வேந்தல் இடம்பெற் றது. (4.20)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

## 2முகக்கவசங்களை....

ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித் தார்.

அத்துடன், வீட்டைவிட்டு வெளியே செல்லும்போது 'பேஸ் பீல்ட்' முகக்கவ சம் கட்டாயமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, வீட்டுக்கு அருகாமை யில் உள்ள தடுப்பூசி செலுத்தும் சிகிச்சை நிலையத்துக்குசென்று அங்கு வழங்கப்படுகின்ற தடுப்பூசியை உடனடியாக பெற்றுக் கொள்ளுமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்கின் றேன் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஒருசிலர் வெளிநாடுக ளுக்குச் செல்வதற்கு ஒவ்வொரு வகை யான தடுப்பூசிகளைத் தேடிக்கொண்டு இருக்கின்றனர். வெளிநாட்டுக்குச் செல்ல முன் யாருடைய உயிருக்கா வது உத்தரவாதம் கொடுக்க முடியுமா? ஆகவே, கொரோனாவிலிருந்து தமது உயிர்களைப் பாதுகாத்துக்கொள்வது ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். மற்றவர்கள் முடிவெடுக்கும் வரை பார்த்துக் கொண்டிருக்காமல் சுகாதார வழிமுறைகளை உரிய முறையில் பின்பற்றி நடவுங்கள்.

இந்தக் காலப்பகுதியில் அனைவரும் முடிந்தளவு வீடுகளில் இருப்பதுதான் பாதுகாப்பானது. கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு தனிமைப்படுத்த லில் இருப்பது மிகவும் முக்கியமானது. எனவே, கொரோனாவிலிருந்து பாது காப்பைப் பெற சுகாதார அமைச்சின் ஐந்து முக்கியமான சுகாதார வழிகாட் டல்களைப் பின்பற்றுங்கள். - என் றார். (த22)

# பொதுச்சுகாதாரப் பரிசோதகருக்கு மீண்டும் தொற்றியது கொரோனா

வவுனியா,செப்.3

வவுனியா நகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் நோயாளர் காவு வண்டியின் சாரதி ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. இவர்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு முன்னரும் தொற்று ஏற்பட்டிருந்தது.

இருவருக்கும் தடிமன் மற்றும் இருமல் அறிகுறிகள் தென்பட்டதை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோத னையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது. இவர்கள் அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளல், தொற்றாளர்களைத் தனிமைப்படுத்தல், தொற்றாளர்களைக் கண்காணித்தல், தனிமைப்படுத்தப்பட்ட வர்களைக் கண்காணித்தல், தொற்றா ளர்களைச் சிகிச்சை நிலையங்களுக்குக் கொண்டு செல்லல் உள்ளிட்ட களப்பணி களில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த சுகாதாரப் பரிசோதருக்கு சில மாதங்களுக்கு முன்னரும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு அவர் குணமடைந்திருந்தார். அத்துடன் கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளார் என்பது கு றிப்பிடத்தக்கது. (ஒ.4.18)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

## வவுனியாவில்....

கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் மற் றும் சிலருக்கு எழுமாறாக மேற்கொள் ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனையில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்களை இடைத்தங்கல் நிலை யங்களில் தங்க வைப்பதற்கான ஏற்பா டுகளை சுகாதாரப் பிரிவினர் மேற் கொண்டுள்ளனர். (கு-4,110)


# மரண அறிவித்தல்

மலர்வு 17 . 02 . 1935



மறைவு 01 . 09 . 2021

**திருமதி சுமனாதேவி (சத்தியவதி) பத்மநாதன்**

(ஓய்வு பெற்ற ஆசிரியை - தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, குரும்பசிட்டி பொன் பாரமானந்தன் மகாவித்தியாலயம்)

யாழ் தெல்லிப்பளை குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சுமனாதேவி (சத்தியவதி) பத்மநாதன் அவர்கள் 01.09.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு, சிவபாக்கியம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற பேரம்பலம், பார்வதியின் அன்பு மருமகளும், பத்மநாதன் (ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர், நெடுங்கேணி) அவர்களின் அன்பு மனைவியும், ரோகிணி (இலங்கை ), பிரதாப் (சுவிட்சர்லாந்து), ரூபினி (ஐக்கிய இராச்சியம்), அமிர்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிரஞ்சன், ஹிராந்தி, ரவீந்திரா, கணேசமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், சத்தியபாமா (கனடா), காலஞ்சென்ற சிவராஜன் அவர்களின் அன்புச் சகோதரியும், சாருக்ஷன், பிரணுக்ஷன், அபிலஷா, அக்ஷரா, வர்மினி, தர்மினி, அபீஷன், சஜினி, சகீரன் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொரோனா பரவல் தடுப்பு சுகாதார விதிமுறை களுக்கமைய வவுனியாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நிரந்தர வசிப்பிடம் : பாக்கியவாசா, குரும்பசிட்டி, தெல்லிப்பளை.

தற்காலிக வசிப்பிடம் : இறம்பைக்குளம், வவுனியா .

தொடர்புகளுக்கு :

பத்மநாதன் (கணவர்) +94 776623905

பிள்ளைகள் : ரோகினி +94 777305553 ரூபிணி - +44 7961727284

பிரதாப் +41 791953453 அமிர்தினி - + 1 4162994607


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 70களை நினைவுபடுத்தும் 'வரிசை யுகம்'

**கொழும்பு, செப். 3**

**அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளதுடன், பொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே, 70களைப் போன்று நாட்டில் மீண்டும் 'வரிசை' யுகம் உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சீ. அலவத்துவல சுட்டிக்காட்டியுள்ளார்.**



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

50 ரூபாவாகக் காணப்பட்ட சீனி இறக்குமதி வரியைத் தனது சகாக்கள் இலாபமடைய வேண்டும் என்பதற்காக இந்த அரசு குறைத்தது இதனால் அரசுக்கு மூன்று மாதங்களில் ஆயிரத்து 600 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டது. இது தொடர்பில் நாம் தகவல் வெளியிடுகையில், சீனி விலையைக் கட்டுப்படுத்துவதற்காகவே வரிக் குறைப்பு இடம் பெற்றது எனவும், அவ்வாறு இல்லாவிட்டால் சீனி ஒரு கிலோவின் விலை 240 ரூபாவரை அதிகரித்திருக்கும் எனவும் ஆளுந்தரப்பால் கூறப்பட்டது. ஆனால் இன்று என்ன நடக்கின்றது? வரிக் குறைப்புச் செய்தும் சீனி விலை உச்சம் தொட்டுள்ளது.

ஊடகக் கண்காட்சிகளுக்காக இன்று சீனிக் களஞ்சியசாலைகள் சுற்றி வளைக்கப்படுகின்றன. குறைந்த விலையில் சீனி இறக்குமதி செய்தவர்களின் விவரம் சுங்கத்திடம் இருக்கும். அதனை அடிப்படையாகக்கொண்டு சுற்றி வளைப்புகளைச் செய்ய வேண்டும். தனது சகாக்களைப் பாதுகாப்பதற்கு அரசு முற்படக்கூடாது. மக்களை ஏமாற்றும் நோக்கில் சுற்றி வளைப்புகள் இடம்பெறக்கூடாது.

கொரோனாத் தொற்றால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு புறம் ஊசிக்கு வரிசை. தடுப்பூசித் திட்டம்கூட முறையாக முன்னெடுக்கப்படவில்லை. அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. பொருள்களுக்குத் தட்டுப்பாடும் நிலவுகின்றது. பொருள்களைப் பெறவும் மக்கள் வரிசையில் காத்திருக்கின்றனர். அதாவது 70 - 77 காலத்தைப் போன்று வரிசை யுகம் உருவாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது - என்றார். (ஒ-44)



## வெளிநாட்டு அமைச்சருடன் நோர்வேத் தூதுவர் சந்திப்பு

கொழும்பு, செப். 3

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ட்ரெய்ன் ஜொரான்லி எஸ்கெடல் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இடையிலான சந்திப்பு கடந்த 30ஆம் திகதி திங்கட்கிழமை வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது, இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையிலான பரஸ்பர நன்மை பயக்கும் கூட்டாண்மையைப் பாராட்டிய அமைச்சர் பீரிஸ், ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர நலன் ஆகிய துறைகளை ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான நாட்டின் ஆர்வத்தை வலியுறுத்தினார்.

இலங்கை தொடர்ந்தும் பயனடையக்கூடிய நோர்வே அபிவிருத்தி ஒத்துழைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியிலான முதலீடு தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் மீன்வளத் துறையிலான ஒத்துழைப்பு ஆகியவற்றை வலியுறுத்தி தூதுவர் எஸ்கெடல் விரிவாக விபரித்தார். புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் நோர்வேயுடன் முதலீட்டுக் கூட்டாண்மைக்கான சாத்தியத்தை அவர் குறிப்பிட்டார்.

இலங்கை நோர்வே கூட்டாண்மையின் மைல்கல்லாக மீன்வளத்துறையில் வலுவான ஒத்துழைப்பைத் தூதுவர் எடுத்துரைத்தார். கடல் வளங்களில் ஆராய்ச்சி, அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் கடல் மூலோபாயத்தின் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பது குறித்தும் இதன்போது குறிப்பிடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் அமைச்சின் மூத்த அதிகாரிகளும் பங்கேற்றனர். (ம)

## கொரோனாவைத் தடுக்க ஐவர்மெக்டின் பரிந்துரை

கொழும்பு.செப்.3



ஐவர்மெக்டின் என்ற மாத்திரை கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்குப் பயனுள்ள மருந்து என்று பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் மருத்துவர் அசோக பங்கொல்ல பரிந்துரைத்துள்ளார்.

மிகக் குறைந்த விலையில் கிடைக்கும் இந்த மருந்து, 1975 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. மனிதர்களுக்குப் புழுக்களால் பரவும் நோய்கள் மற்றும் வெளிப்புற ஒட்டுண்ணிகளுக்குச் சிகிச்சையளிக்க இது பயன்படுத்தப்பட்டது. தென்னாபிரிக்காவில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தாமதப்படுத்த, இந்த மருந்தின் பயன்பாடு ஒரு முக்கிய காரணியாகும்.

வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தவும், தொற்றால் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கையைக் குறைக்கவும் இந்த மருந்து மிகவும் பொருத்தமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஐவர்மெக்டின் (ivermectin) மாத்திரைகளைக் கொரோனாத் தொற்றாளர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த மருந்து பாதுகாப்பானது என்றோ, கொரோனாவுக்கு எதிராக ஆற்றல் மிக்கது என்றோ நிரூபிக்கப்படவில்லை. அதனால் முழு சோதனை இன்றி இதை மக்களுக்குக் கொடுப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த மருந்தை உருவாக்கிய மெர்க் அண்ட் கோ நிறுவனம், கொரோனாவுக்கு எதிராக எங்கள் மருந்து வேலை செய்யும் என்பதற்கான ஆதாரம் இல்லை. அதற்கான அறிவியல் ரீதியான சோதனை முடிவுகள் எதுவும் இல்லை. [illegible] எங்களுக்கு வலுவான ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளது. (ஒ-4)

## 2 ஆயிரம் கிலோ மஞ்சள் மீட்பு

கொழும்பு, செப். 3



இலங்கைக் கடற்படையினர் நீர்கொழும்பு கடற்கரைப் பகுதியில் மேற்கொண்ட சிறப்புச் சோதனையில் 2 ஆயிரத்து 23 கிலோ கிராம் எடையுள்ள உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இரு டிங்கிப் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவத்தில் கைதான 36 மற்றும் 37 வயதுடைய இரு நபர்களும் நீர்கொழும்பு, பிடிபன பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டனர். குற்றம்சாட்டப்பட்டவர்களுடன் உலர்ந்த மஞ்சள் மற்றும் டிங்கிப் படகுகள் ஆகியவை மேலதிக சட்ட நடவடிக்கைக்காகக் கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஒ-இ)

*ஈஸ்டர் தாக்குதல்*

## வழக்குகளை விசாரிக்க நீதியரசர் குழு நியமனம்

கொழும்பு, செப். 3

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் 25 பேருக்கு எதிரான வழக்கு விசாரணைகளை மேற்கொள்ள மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழாம் ஒன்று பிரதம நீதியரசரால் நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விசாரணை நடவடிக்கைகளுக்காக நீதிபதி தமித் தொடவத்த தலைமையில் நீதிபதிகள் அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க ஆகியோர் இந்தக் குழாமின் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ-இ)

## ரஷ்யா, இலங்கை நாடுகளுடைய பாதுகாப்புச் செயலர்கள் சந்திப்பு

கொழும்பு, செப். 3


ரஷ்யாவின் பாதுகாப்புச் செயலர் நிகோலாய் பத்ருஷோ, இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கமால் குணரத்ன இடையிலான சந்திப்பு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

ரஷ்யக் கூட்டமைப்பின் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்குவின் அழைப்பின் பேரில் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல கமால் குணரத்ன தலைமையிலான குழு ரஷ்யாவுக்கு மேற்கொண்ட உத்தியோக பூர்வ விஜயத்தின். போதே ரஷ்யாவின் பாதுகாப்புச் செயலருடனான சந்திப்பும் இடம்பெற்றுள்ளது.

நட்பு ரீதியானதாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இராணுவத் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உட்பட இருதரப்புப் பாதுகாப்பு ஒத்துழைப்புக் குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடினர். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சண்முகம்பிள்ளை கனகலிங்கம்

அராலி தெற்கை பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம்பிள்ளை கனகலிங்கம் அவர்கள் நேற்று (02.09.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை செல்வலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தனலட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம், கனகாம்பிகை மற்றும் பரமலிங்கம், யோகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலைச்செல்வி, குணச்செல்வன், காலஞ் சென்ற கருணானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், முருகவேல், சோபனா, சீத்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், கலாநிதியின் ஆசையப்பாவும், மாதங்கி, சேயோன், சாம்பவி, டயான், அருண்முகிலன், ஆர்த்தி, சாய்கிதன் ஆகியோரின் அன்புப் பேரனாரும், அகன்யனின் அன்புப் பூட்டப்பாவும் ஆவார்.

அன்னாரின் இல்லத்தில் இறுதி அஞ்சலி நிகழ்வு நடைபெற்று, பூதவுடல் இன்று (03.09.2021) காலை ஏழு மணியளவில் தகனத்திற்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2ஆம் கள்ளி ஒழுங்கை,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

# 109 வயது மூதாட்டியை சாகடித்த கொரோனா!

கொழும்பு, செப். 3

கொரோனா வைரஸ் தொற்றால் மட்டக்களப்பு, புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 109 வயது மூதாட்டி ஒருவர் சாவடைந்துள்ளார்.

சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (த22)

# மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 04 . 1944



மறைவு
02 . 09 . 2021

## தனலெட்சுமி தெய்வேந்திரன்

யாழ் காரைநகர் வேதரடைப்பை பிறப்பிடமாகவும், கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தனலெட்சுமி தெய்வேந்திரன் அவர்கள் நேற்று (02.09.2021) வியாழக்கிழமை கண்டியில் சிவனடிசேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் வீ. வே.சண்முகம், மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னம்மபலம் தெய்வேந்திரன் அவரக்ளின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கசிவம், கௌரிதாஸ் மற்றும் தட்சணமூர்த்தி, சிவராஜா, ஜெயலட்சுமி, சிவசண்முகதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருள்யாதவன், சிந்துஜா, திருச்செந்தூரன் ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வெள்ளிக்கிழமை ( 03.09.2021 ) கண்டி, மஹிய்யாவ பொதுமயானத்தில் இடம்பெறும் என்பதை துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

No 26/17a,
Vidyartha Mawatha, Kandy.

தகவல்:
ஜெயலட்சுமி ( சகோதரி )
0777366810 / 0770772215

# மரண அறிவித்தல்



## திருமதி நிரோஷி புஸ்பகுமார்

**Bachelor of Law at University of Wolverhampton**

**(பணிப்பாளர் - மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை)**

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் 651/13, நாவலர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. நிரோஷி புஸ்பகுமார் 01.09.2021 அன்று அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் சுகுமாரன் (முகாமைத்துவப் பணிப்பாளர் - மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை) நிதர்சினி தம்பதியரின் அருமைப் புதல்வியும், நவரத்தினம் - நாகராணி தம்பதியரின் பாசமிகு மருமகளும், புஸ்பகுமாரின் (புகையிரத நிலைய அதிபர் - கொடிகாமம்) அன்பு மனைவியும், காசினி (தரம் 01 - யா/ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்), கரிஸ்னி ஆகியோரின் அன்புத் தாயாரும், செந்தூரன் (பிரான்ஸ்), டில்லிக்குமரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்சிகா (பிரான்ஸ்), நளாயினி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2021) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

தகவல்:
வி.சுகுமாரன் (தந்தை)
077 773 0597

தோற்றம்
15.10.1994

மறைவு
01.09.2021

651/13, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர் பிரகாஷின் மறைவுக்கு கூட்டமைப்பு இரங்கல்

யாழ்ப்பாணம், செப். 3

ஊடகவியலாளர் பிரகாஷின் இழப்பு தமிழ் ஊடகத்துறைக்கு பெரும் இழப்பு என்று அவரது மறைவையொட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுயாதீன ஊடகவியலாளர் பிரகாஷ், கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்தார். இவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து கூட்டமைப்பால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில்,

சிறப்புத் தேவையுடைய ஒருவராக இருந்து கொண்டும் ஊடகவியலாளர் பிரகாஷ் மிகச் சிறப்பாக பணியாற்றினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனால் விருது வழங்கி அவர் கௌரவிக்கப்பட்டும் இருந்தார்.

அவர் அண்மைக்காலமாக தனது ருவிட்டர் பதிவுகள் மூலம், தமிழர் தாயகத்தில் நடைபெறும் விடயங்களை உடனுக்கு உடன் வெளியுலகுக்கு அம்பலப்படுத்தி வந்தார். அவர் ஊடாக பல விடயங்கள் வெளிப்படுத்தப் பட்டுவந்தன.

இந்த நிலையில் கொரோனாத் தொற்றால் அவர் உயிரிழந்தமையானது, தமிழ்ச் சமூகத்துக்கும், தமிழ் ஊடகத்துறைக்கும் பேரிழப்பாகும், என்றுள்ளது.

(ஒ.5)

## திருமண சேவை

எம்மிடம் வெளிநாட்டு, உள்நாட்டு மணமகன், மணமகள் உள்ளனர். பொருத்த மானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**kpthirumanam.com**
**0740891995, 077 0050 344**

## வேலையாள் தேவை

நீர்வேலியில் இயங்கும் பெயின்ட் விநியோக நிலையத்திற்கு க.பொ.த. உயர் தரத்தில் வர்த்தகத்துறையில் சித்திப்பெற்ற பெண்கள் தேவை.

கொழும்பு பெயின்ற் ஹவுஸ்
நீர்வேலி.
**021 223 0235, 077 039 2728**

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில் மருத்துவ உத்தியோகத்தராக பணிபுரியும் **டாக்டர்.த.திலீபன்** அவர்களின் அன்பு மாமனார்

**அமரர் தாமு துரைரத்தினம்**

அவர்கள் 01.09.2021 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணியாளர் நலன்புரிச் சங்கம்**
**சித்த போதனா வைத்தியசாலை - கைதடி.**

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி **மரியசீலி மரியதாஸ்** அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு.அந்தோனிப்பர்னாந்து மரியதாஸ்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி**
**இளவாலை.**

## DISTRICT SECRETARIAT, JAFFNA
## INVITATION FOR BIDS – IFB 04

Department Procurement Committee of Jaffna District Secretariat called bids by IFB 04 for Procurement of Goods. Please see the Invitation for Bids (IFB -04) in Daily News dated 03.09.2021 or on Jaffna District Secretariat website - www.jaffna.dist.gov.lk

The Chairman,
Department Procurement Committee,
District Secretariat,
Jaffna.

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/ Service Details | Non- re fundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs.In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 01 | Extension of NTS Lecture Hall 2nd Floor Stage I & Stage II | 500.00 | 495,000.00 | 91 | 24.66 | C6 |
| 02 | Extension of Renal Unit at Dialysis Unit | 500.00 | 127,000.00 | 91 | 6.31 | C7 |
| 03 | Internal Painting for JICA Building | 500.00 | 108,000.00 | 91 | 5.39 | C7 |
| 04 | External Painting of JICA Building and Painting Works for Old OPD Corridor, All Security Booth, Respiratory Unit | 500.00 | 53,000.00 | 91 | 2.62 | C8 |
| 05 | Renovation of Ward No 06 | 500.00 | 36,000.00 | 91 | 1.77 | C 9 |
| 06 | Corridor Partition Work and Cupboard Fixing at DSA Unit, Renovation Works at ATICU and Aluminium Partition for Cardiothoracic Unit | 500.00 | 27,000.00 | 91 | 1.34 | C 9 |
| 07 | NTS Motor Room Roof repair, Repair of Rain water leakage from JICA Balcony, Floor Tile work at Skin Clinic, Iron Grills for Drainage Cannel in front of Mortuary and Cleaning Service Office and Supply Fixing of Curtins at Ward No 27 & Accountant Room | 500.00 | 25,000.00 | 91 | 1.24 | C 9 |
| 08 | Construction of Toilet for Washing Room near Kitchen and Renovation of X-ray Department Toilets | 500.00 | 15,000.00 | 91 | 0.71 | C 9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 06.09.2021 up to 21.09.2021 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 22.09.2021, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital,
Jaffna.
03.09.2021

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 20.02.1940 இறப்பு 01.09.2021

யாழ் மாவட்ட சி.க.கூ.சங்க சமாசத்தின் யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் முன்னாள் பணிப்பாளராகவும், பிராந்திய சபைத் தலைவராகவும் இருந்து பிராந்திய செயற்பாட்டிற்கு தம்மாலான ஒத்துழைப்பினை நல்கிய

**திரு.மில்பர் ராஜன்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ் மாவட்ட சி.க.கூ.சங்க சமாச,**
**யாழ்ப்பாணப் பிராந்திய சபை.**

## துயர் பகிர்கின்றோம்

**தோற்றம் : 21.02.1946** **மறைவு : 02.09.2021**



எமது அச்சுவேலி அஞ்சல் அலுவலகத்தில் "அஞ்சல் அதிபராக" கடமையாற்றும் **திரு. உ.ரகுபதி** அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர்**
**சபாபதி உருத்திராபதி**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம். அத்துடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அஞ்சல் அலுவலகம்**
**அச்சுவேலி.**

**அஞ்சல் சமூகம்,**
**அச்சுவேலி.**

## கண்ணீர் அஞ்சலி.



நல்லூர் லயன்ஸ் கழக மூத்த உறுப்பினர் **லயன் விநாயகமூர்த்தி சுகுமாரன்** அவர்களின் அன்பு மகள்

**திருமதி நிரோசி புஸ்பகுமார்**

அவர்களின் மறைவிற்கு எமது கழக அங்கத்தவர்களின் இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம்.

**தலைவர், அங்கத்தவர்கள்,**
**நல்லூர் லயன்ஸ் கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 15 . 08 . 1960

மறைவு 04 . 08 . 2021

## அமரர் குருநாதன் சோதிநாதன் (சோதி)

(ஆலய கட்டட ஆசாரியார்)

இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து ஆவணி மாதம் (04.08.2021) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எம் குடும்பத் தலைவர் கு.சோதிநாதன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து இக்கட்டான காலச்சூழலில் நேரடியாகவும் தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்கள் மூலமாகவும் தொடர்புகொண்டு எம்முடன் துயர் பகிர்ந்து கொண் டோருக்கும், இறுதிக் கிரியைகளுக்கான சகல ஒழுங்குகளை மேற்கொள்ள உதவி ஒத்தாசை புரிந்த உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஊரவர்களிற்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.


அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (03.09.2021) வெள்ளிக் கிழமை கீரிமலை தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர் வரும் (05.09.2021) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

குறிப்பு:- நாட்டின் பொது சுகாதார நடைமுறைகளுக்கு அமைய மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ளும் உறவுகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்த வேண்டியுள்ளது என்பதனையும் அனைவருக்கும் மிகுந்த மன வேதனையுடன் அறியத் தருக்கின்றோம்.

நாயகி மில், கோகுல வீதி,
உரும்பிராய் மேற்கு, கோண்டாவில்.
077 226 9967, 077 6199 695

குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10.12.1950

மறைவு 14.09.2020

பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## திரு. இரத்தினசிங்கம் பரமேஸ்வரன்

(கிட்டுமாமா)


திதி-தேய்பிறை துவாதசி

ஓராண்டு சென்றாலும் தாங்கமுடியவில்லை
உங்கள் இழப்பை
காலங்கள் கடந்தாலும் மறக்க முடியுமா
உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் தொடரும்

பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்.

மாறாத் துயருடன்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 05 . 1942

மறைவு 28 . 08 . 2021

அமரர்

## திரு.இராசா சச்சிதானந்தன் (சச்சி மாமா)

(மினி பஸ் சாரதி இல.769)

விழிசிட்டி, ஏழாலை தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.இராசா சச்சிதானந்தன் (28.08.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா-தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையா-கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசையா - சந்திரவதனாவின் அன்புச் சகோதரனும், சசீதரன் (நெதர்லாந்து), சுதர்சினி (பிரான்ஸ்), சுகாதரன் (அமெரிக்கா), சுஜாதா (இலண்டன்) ஆகி யோரின் பாசமிகு தந்தையும், உதயகுமார், ரவி, சுதர்சினி, தனுஷா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், றெனிஷா, றஜிதன், தர்னிஷ், மானசிகா, அஞ்சுகா, சசீனா, திஷானிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஏழாலை மேற்கு, உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விழிசிட்டி, ஏழாலை தெற்கு.

தகவல்:
பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்



## திருமதி கனகலிங்கம் நல்லம்மா (கிளி)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகலிங்கம் நல்லம்மா (கிளி) அவர்கள் நேற்று (02.09.2021) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன் சின்னம்மா அவர்களின் இளைய புதல்வியும், காலஞ்சென்றவர்களான முருகன் சின்னி அவர்களின் அன்பு மருமகளும், கனகலிங்கம் (அப்பாக்குட்டி - ஓய்வுபெற்ற மின்சார சபை ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், மங்களேஸ்வரன் (தவம்-சுவிஸ்), சுகந்தினி, கஜேந்திரன் (ரூபன் - சுவிஸ்), காண்டீபன் (முன்னாள் சாலை முகாமையாளர்-இ.போ.ச மன்னார்), திவாகர் (தெடிகம அடகு நிலையம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குகந்தினி (சுவிஸ்), ராதிகா (பாமினி-சுவிஸ்), ரகுணேஸ்வரன், ராகினி ஆகியோரின் அன்பு மாமியாரும், அபர்ணா, அவந்திகன், அக்ஷன், ஆர்ணிகா, அநந்திகா (சுவிஸ்), மிலோஜன், கவிஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நாகம்மா, காலஞ்சென்றவர்களான செல்லம்மா, வல்லிபுரம், வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2021) அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் மட்டுவில் தெற்கு சின்னத்தா இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்ணன் ஆலய வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 724 4688
075 355 5914

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாச்...

ளைப் பெற வேண்டும்.

நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை எதிர்வரும் 06ஆம் திகதிக்குப் பின்னர் தளர்த்துவதா? அல்லது நீடிப்பதா? என்பது தொடர்பில் இன்று ஜனாதிபதி தலைமையிலான கொரோனா வைரஸ் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணிக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-22)

## கொரோனாவால்...

சம் பிரகாஷ் (வயது26).

இவரைவிட, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நெடுந்தீவைச் சேர்ந்த 70 வயதுடைய ஆண் ஒருவரும் பருத்தித்துறையைச் சேர்ந்த 72 வயதுடைய ஆண் ஒருவரும் கந்தர்மடத்தைச் சேர்ந்த 79 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

அல்வாயைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்றுவந்தநிலையில் உயிரிழந்தார்.

தெல்லிப்பழை மருத்துவமனையில் ஒருவரது சடலம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 265ஆக உயர்வடைந்துள்ளது. (த-26)

## வவுனியாவில்...

உறுதிப்படுத்தப்பட்டது. அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று உயிரிழந்தனர்.

ஏனைய இருவரும் நேற்று திடீர் சுகவீனமுற்ற நிலையில் வவுனியா மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்பட்ட போது உயிரிழந்தனர்.

அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

சூசைப்பிள்ளையார் குளம், கந்தசாமி கோவில் வீதி, செட்டிகுளம், ஆண்டியா புளியங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே உயிரிழந்துள்ளனர். (த-110)

## 3,619 பேருக்கு....

வித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 47 ஆயிரத்து 749 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,952 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 78 ஆயிரத்து 168 ஆக உயர்ந்துள்ளது. (த-22)

## 204 பேர் சாவு!....

அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்து 604 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 204 பேரில் 95 பெண்களும், 109 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் ஆண்கள் மூவரும், பெண்கள் இருவரும் என 05 பேர் 30 வயதுக்குட்பட்டவர்களாவர். 30 ஆண்கள், 20 பெண்கள் என 50 பேர் 30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 149 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 76 ஆண்களும், 73 பெண்களும் அடங்குகின்றனர். (த-22)

## சீனி விலை....

னது.

அதன்படி, வெள்ளைச் சீனி ஆகக் கூடுதலான சில்லறை விலையாக பொதி செய்யப்பட்டவை 125 ரூபாவுக்கும், பொதி செய்யப்படாதவை 122 ரூபாவுக்கும் மட்டுமே விற்பனை செய்ய முடியும்.

அதேவேளை,

பழுப்பு அல்லது சிவப்பு சீனி ஆகக் கூடுதல் விலையாக பொதி செய்யப்பட்டவை 128 ரூபாவுக்கும் பொதி செய்யப்படாதவை 125 ரூபாவுக்கும் மட்டுமே விற்பனை செய்ய முடியும்.

இறக்குமதியாளர்களின் ஆகக்கூடுதல் மொத்த விற்பனை விலையாக வெள்ளைச் சீனிக்கு 116 ரூபா தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், அரிசிக்கான அதிகூடிய சில்லறை விலையை நிர்ணயித்து விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றும் வெளியாகியுள்ளது.

இதன்படி, கீரி சம்பா கிலோ ஒன்றின் விலை 125 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வெள்ளை அல்லது சிவப்பு சம்பா அரிசி கிலோ ஒன்றின் விற்பனை விலை 103 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், சிவப்பு நாடு கிலோ ஒன்றின் அதிகூடிய சில்லறை விலை 98 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பச்சை அரிசி கிலோ ஒன்றின் அதிகூடிய விலை 95 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (த-இ)

## மின்னல்....

தெற்கில் நேற்று மதியம் இடம்பெற்றது.

இதில், அச்சுவேலி வடக்கை சொந்த இடமாகவும் அல்வாயை வதிவிடமாகவும் கொண்ட பருத்தித்துறை இ.போ.சபை சாரதியான தியாகராசா மதனபாதம் (வயது 44) என்பவரே உயிரிழந்தார். அவர் மூன்று பிள்ளைகளின் தந்தை.

அச்சுவேலி தெற்கு நாவற்காட்டை சேர்ந்த விநாயகமூர்த்தி தங்கேஸ்வரன் (வயது 40) கமலபாதம் நிமர்சன் (வயது 16) ஆகியோரே சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இவர்கள் அச்சுவேலி தெற்கில் உள்ள விழுப்பாக்காடு என்ற தோட்ட நிலத்தை பயிர்ச்செய்கைக்கு தயார் செய்து கொண்டு இருக்கும்போது நேற்று நண்பகல் மழை பெய்துள்ளது. இதன்போது இடி மின்னல் தாக்கியே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி எஸ். மோகன், அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் இறப்பு விசாரணை மேற்கொண்டார். பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவனைக்கு கொண்டு செல்லப்பட்டது. (த-11,26)

## வடக்குக்கு....

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் ஊடாக பாவனையாளர்களுக்கு மட்டுமே சீனியை விற்பனை செய்யமுடியும். மொத்தமாக சீனியை விற்பனை செய்யமுடியாது என்று வடக்கு மாகாண சபை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மு.நந்தகோபாலன் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 89 ஆயிரம் கிலோகிராம் சீனியும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு 39 ஆயிரத்து 500 கிலோகிராம் சீனியும், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு தலா 20 ஆயிரம் கிலோகிராம் சீனியும், மன்னார் மாவட்டத்துக்கு 18 ஆயிரம் கிலோகிராம் சீனியும் கிடைக்கப்பெற்றுள்ளது.

ஹிங்குரானை சீனித் தொழிற்சாலையிலிருந்து, மேற்படி மாவட்டங்களின் சங்கங்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக சீனி இறக்குமதிசெய்யப்பட்டுள்ளது என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## பி.சி.ஆர். ....

தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று 479 பேருக்கு பி.சி.ஆர். மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி 52 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அதன்படி,

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை 8, யாழ்ப்பாணம் போதனா மருத்துவனை 11, ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனை 4, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை , முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனை 3, வவுனியா மாவட்ட பொது மருத்துவனை 4, யாழ். நொதேர்ன் சென்றல் மருத்துவமனை 1, மல்லாவி ஆதார மருத்துவமனை 2, சங்கானை பிரதேச மருத்துவமனை 1, பூவரசங்குளம் பிரதேச மருத்துவமனை 2, செட்டிகுளம் ஆதார மருத்துவனை, தர்மபுரம் பிரதேச மருத்துவமனை , முல்லைத்தீவு விமானப்படை முகாம், மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை, புளியங்குளம் பரதேச மருத்துவமனை ஆகியவற்றில் தலா ஒவ்வொருவர், யாழ். மாநகர சபையில் 4 பேர் என 52 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (த)

## அங்கஜனின்....

வருமாறு:

கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன வேட்பாளர் கோத்தாபய ராஜபக்சவினால் பத்து முக்கிய அம்சங்கள் அடங்கிய கொள்கைப் பிரகடனம் வெளியிடப்பட்டது. தேசிய கொள்கைச் சட்டகத்தின் "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" என்னும் தொனிப் பொருளில்,அமைந்த பத்துஅம்சங்களுக்கான அங்கீகாரமாகவே கோத்தாபய ராஜபக்சவுக்கு பெருமளவான மக்கள் தங்கள் ஆதரவை வழங்கியிருந்தனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவியேற்று ஒரு வருடம் நிறைவடைந்துள்ள நிலையில், "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" என்பதை முதன்மையாகக்கொண்டே நாடு முழுவதற்குமான அபிவிருத்தி வேலைகள் இடம்பெற்று வருகின்றன. உலகநாடுகள் அனைத்துமே எதிர்நோக்கியிருக்கும் இக்கட்டான கொரோனாச் சூழ்நிலையிலும்கூட, தாம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதில் சற்றேனும் பின்னிற்காமல், மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை எமது அரசாங்கம் துரிதமாகச் செய்துவருகிறது. இன, மத, பிராந்திய பேதமின்றி, "இலங்கையர்" என்ற ஒரே கூரையின்கீழ் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய சூழ்நிலையில், அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்தை, தமது "கனவு" திட்டம் என வேறு பெயர்களைப் பாவித்து மக்களைத் திசைதிருப்பும் நடவடிக்கையில் சிலர் இறங்கியிருப்பது துரதிர்ஷ்டவசமானது.

அரசாங்கத்தின் "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" தேசிய வேலைதிட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானது. இத்திட்டத்தை எப்பிரதேசத்தைச் சேர்ந்த அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் தம்மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியும். ஆனால், வேறு பெயரிலான திட்டங்கள்போன்று அதனை நடைமுறைப்படுத்த முடியாது. இத்திட்டங்கள் அனைத்துமே மக்களுக்காக ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் இடம்பெறுவனவாகும். அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் இந்தத்திட்டங்களைத் தம்மக்களுக்காகப் பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டுமே தவிர, வேறு பெயரிலான திட்டங்களாக அறிவிப்பது உகந்ததல்ல.

மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை நாம் பெரிதும் மதிக்கின்றோம். அம்மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களையும் அபிவிருத்தியையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம். என்றுள்ளது.

'என் கனவு யாழ்' என்ற பெயரில், அரசாங்கத்தின் திட்டங்களை தன்னுடைய சொந்தத் திட்டங்கள் போல நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் மேற்கொண்டு வந்த நிலையில், "அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்தை, தமது "கனவு" திட்டம் என வேறு பெயர்களைப் பாவித்து மக்களைத் திசைதிருப்பும் நடவடிக்கையில் சிலர் இறங்கியிருப்பது துரதிர்ஷ்டவசமானது" என்று அவரைச் சாடும் வகையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன், யாழ். மாவட்ட நிர்வாகக் கட்டமைப்பில் மேற்கொண்டு வரும் அரசியல் தலையீடுகளுக்கு எதிராக துரித மாற்று நடவடிக்கை எடுத்திருந்தார் பிரதமரின் ஒருங்கிணைப்பாளரான கீதநாத். இந்த நிலையில் அரசாங்கத்தின் ஆசிர்வாதத்தோடு நேற்று வெளியிட்ட அறிக்கை மூலம், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனுக்கு எதிராகவும், அவரது நடவடிக்கைகளுக்கு துணை போகும் அதிகாரிகளுக்கு எதிராகவும் முழுமூச்சோடு நடவடிக்கையில் இறங்கப் போவதை அரசாங்கம் கோடிகாட்டியிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (அ)

## தென்மராட்சியில் ....

பரிசோதனையில் தெரியவந்தது.

கைதடி முதியோர் இல்லத்தில் 153 பேருக்கு மேற்கொண்ட அன்டி.ஜென் பரிசோதனையில் 72 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் 103 பேருக்கு மேற்கொண்ட அன்டிஜென் பரிசோதனையில் 28 பேருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மேற்கொண்ட பரிசோதனையில் 9 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கைதடி முதியோர் இல்லத்தில் தொற்றுக்கு இலக்கான அனைவரும் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கைதடி முதியோர் இல்லத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சுகாதார பணியகத்தினரால் மேற்கொண்ட பரிசோதனையில் 40 முதியவர்களும் 2 பணியாளர்களும் தொற்றுக்குள்ளாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-9,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்தை இலகுவாக வீழ்த்தியது பங்களாதேஷ்

டாக்கா, செப். 3



நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ரி20 ஆட்டத்தில் அபார வெற்றிபெற்று ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடரில் 1:0 என்று முன்னிலை வகிக்கின்றது பங்களாதேஷ்.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி வெறும் 60 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது.

அந்த அணியால் வெறும் 16.5 பந்துப்பரிமாற்றங்களே தாக்குப்பிடிக்க முடிந்தது. லாதம், ஹென்றி நிக்கோல்ஸ் ஆகியோர் மட்டுமே இரட்டை இலக்க ஓட்டங்களைக் கடந்தனர். பங்களாதேஷின் சார்பில் முஷ்டாபிஜுர் ரஹ்மான் அதிகபட்சமாக 3 இலக்குகளைக் வீழ்த்தி னார். நசும் அகமது, ஷாகிப் அல் ஹசன், சாய்புதின் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளை வீழ்த்தி னர். 61 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய பங்களாதேஷ் அணி 3 இலக்குகளை மாத்திரமே இழந்து மிக இலகுவாக வெற்றியைப் பெற்றது.

(ம)

**German, Holland (Netherland) Swiss, Ostria**

நாடுகளுக்கான மொழிவகுப்புகள் German Embassy யின் A1 Certificate க்கு ஏற்றவாறு நடைபெறுகிறது.

தொடர்புகளுக்கு: **Mrs.P.Kajenthini**

**T.P: 077 160 4823**

**Jaffna.**

## காணி விற்பனைக்குண்டு

நீர்வேலி தெற்கு கரந்தன் பகுதியில் 7 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் கரந்தன் சந்தியில் இருந்து 200 M தூரம்.

பார்வையிடும் நேரம் : காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை. (தரகர் தேவையில்லை)

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 814 7389, 077 614 7333**

## மரண அறிவித்தல்

மண்ணுலகில் 1937.04.13 விண்ணுலகில் 2021.08.29



### திருமதி வரப்பிரகாசம் கிளாறம்மா

யாழ்ப்பாணம் தும்பளையை பிறப்பிடமாகவும் நெல்லியடியை வதிவிடமாக வும் கொண்டிருந்த திருமதி வரப்பிரகாசம் கிளாறம்மா அவர்கள் 29.08.2021 ஞாயிற்றுக்கிழமையன்று நெல்லியடியில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோப்பர். அந்தோனியாப்பிள்ளை தம்பதிகளின் செல்வப் புதல்வியும் காலஞ்சென்ற ஜோசப் வரப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம். மனுவேற்பிள்ளை. மாகிறேட் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற யசிந்தா. தவா. றெஜி. அமலன் (தம்பி) மற்றும் ஜோனியின் பாசமிகு தாயாரும் தயாளன். வில்லா. மக்ஸி. பிரியந்தினியின் மாமியாரும் வினோ. பிரியந்த். மிலூன். மிரூன். லவீனியா. கேஷினி. கெவின். டல்பினி. மெறிற்றாவின் பாசமிகு பேத்தியாரும் ஆவார்.

தற்போதைய நாட்டு நிலைமை காரணமாக அன்னாரின் பூதவுடல் 03.09.2021 இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் குடும்பத்தினர் முன்பாக நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு :
மகள்-+947 778 78294
021 226 2745

தகவல்:
குடும்பத்தினர்,

## என்றும் நீங்காதநினைவுகளுடன் 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கிருஸ்ணபிள்ளை கணேசமூர்த்தி (ஓடிகணேஸ்)

(வைரவர் கோயிலடி, பத்தமேனி, அச்சுவேலி)



எங்கள் வாழ்வில் ஒளி விளக்காய்
எங்களுக்கு வழிகாட்டிய
எங்கள் அப்பவே!
ஆண்டுகள் பத்தொன்பது சென்றாலும்
தாங்காத வலிகளோடும்
தூங்காத விழிகளுடனும்
வற்றாத கண்ணீருடனும்
பிரிந்து தவிக்கின்றோம் அப்பா!

அப்பா என்ற சொல்லுக்கு
இலக்கணமானவரே!
அன்பால் எம்மை தாங்கியவரே!
எங்களை தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள்?

ஆயிரம் ஆயிரம் உறவுகள்
அருகில் இருந்தாலும்
எங்கள் அப்பாவுக்கு நிகராகுமோ?
உங்களை நினைக்கும் போதெல்லாம்
ஆறுதல் சொல்லவருவது கண்ணீர் மட்டும்தான்

அப்பப்பா. தாத்தா என்று உங்கள் படத்தைப்பார்த்து
உங்கள் பேரப்பிள்ளைகள். அழைக்கின்றனர்
மீண்டும் வருவீரோ அப்பா!!!

தோற்றம்
27.07.1944

மறைவு
03.09.2002

உமது பிரிவால் துயருறும்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03. 09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.